பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை (28.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 335

# கிளிநொச்சியைக் கைப்பற்றும் அரசின் முயற்சி இனி மூர்க்கமாகும்?

## இந்தியாவைச் சமாளித்த திருப்தியில் தாக்குதல் தீவிரமடையும்

கொழும்பு, ஒக்ரோபர் 28

ஈழத் தமிழர் தாயகத்தைக் கைப்பற்றும் இலங்கை அரசின் எத்தனத்துக்கு எதிராகத் தமிழகத்தில் எழுந்த உணர்வெழுச்சியை, புதுடில்லி அரசுடன் மேற்கொண்ட தொடர்பாடல்கள் மூலம் சமாளித்து விட்டதில் திருப்தி கொண்டுள்ள கொழும்புத் தலைமை, இனி கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான தனது படை நடவடிக்கைகளைத் தங்கு தடையில்லாது தெம்புடன் மூர்க்கமாக்கும் என அரசியல் வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு மூலமான தீர்வுக்கு இந்தியாவிடம் உறுதியளித்த இலங்கை போரை நிறுத்துமா?

### அரசின் முடிவைத் தெளிவுபடுத்தக் கோருகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஒக். 28

வடக்கு உட்பட்ட இலங்கையின் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுமூலம் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதன் அவசியம் குறித்து இந்தியாவுடன் சேர்ந்து இலங்கை வலியுறுத்தியிருப்பதால் -

அத்தகைய அமைதிப் பேச்சை முன்னெடுப்பதற்காக இப்போது நடைபெறும் யுத்தம் அரசால் நிறுத்தப்படுமா?

- இவ்வாறு அரசிடம் கேள்வி எழுப்பியிருக்கிறது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.

இந்த விடயம் தொடர்பாக அரசு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அக்கட்சி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவிலியன் இழப்புகளைக் குறைத்து யுத்தத்தை முன்னெடுக்குமாம் அரசு!

### புதுடில்லியில் வைத்து பஸில் உறுதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

இலங்கை அரசு புலிகளுக்கு எதிரான யுத்தத்தை சிவிலியன்களுக்கு மிகக் குறைந்தளவு இழப்போடு முன்னெடுக்கும் என்று புதுடில்லிக்கு உறுதியளித்த இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவர் பஸில் ராஜபக்ஷ, இலங்கையும் இந்தியாவும் ஆத்மார்த்தமான - உண்மையான - நட்பு நாடுகள் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய உறவின் ஸ்திரத்தன்மை நிரூபணம்

### ஊடகத்துறை அமைச்சர் பெருமிதம்

இலங்கை - இந்திய உறவில் சில நாள்களாக நிலவிவந்த முரண்பாடுகளும், அந்த உறவின் ஸ்திரத்தன்மை தொடர்பான சந்தேகங்களும் தற்போது முற்றாக நீக்கப்பட்டு இரு நாடுகளின் உறவும் மிகப் பலமாகவுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன பெருமிதத்தோடு கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை - இந்திய உறவில் விரிசலை ஏற்படுத்த முயன்ற சிலரின் முயற்சிகள் இப்போது தோற்றுப்போயுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்து நடத்திய தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

(12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே →
க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குரிய கணிதம் -11 வினாத்தாள்
பிரபல ஆசிரியர்சோ.கிருஷ்ணதாஸ் (யாழ். இந்துக் கல்லூரி)தயாரித்து அளிக்கிறார்.

## பெற்றோல் விலையை அரசு 25 ரூபாவால் குறைக்க முடிவு?

### ஆனால் அது போதாது என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 28

2009ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் டீசல் மற்றும் பெற்றோல் ஆகியவற்றின் விலைகளை லீற்றருக்கு 25 ரூபாவால் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது என்று ஐ.தே.கட்சியின் எம்.பியான கபீர் காசிம் நேற்றுத் தெரிவித்தார்.

ஆனால் இது மக்களை ஏமாற்றும் செயல் எனக் குறிப்பிட்டுள்ள அவர், உண்மையில் இவற்றின் விலையைக் குறைந்தது எழுபது ரூபாவாலாவது குறைக்கவேண்டும் என்று அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தை பொலிஸில் கைதி ஒருவர் உயிரிழப்பு!

### சயனைட் அருந்தித் தற்கொலையாம்

கொழும்பு, ஒக். 28

கொழும்பு, வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் எனக் கூறப்படும் நபர் ஒருவர் சயனைட் உட்கொண்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தேக நபர் திருகோணமலையில் வைத்துப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்றும் -

அவரிடம் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து பயங்கரவாதத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு - செலவுத் திட்டத்தை ஐ.தே.க. எதிர்க்கும்

கொழும்பு, ஒக். 28

அரசால் அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி இந்த முறையும் எதிராகவே வாக்களிக்கும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தைப் பயன்படுத்தி அரசு மேற்கொண்டுவரும் பல ஊழல் மோசடிகளை மக்களுக்கு அம்பலப்படுத்தப்போவதாகவும் அக்கட்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸில் தமிழ் இளைஞர்கள் 24 மணி நேர விழிப்புப் போர்

பேர்ண், ஒக்.28

சுவிஸில் உள்ள தமிழ் இளையோர் அமைப்பினர் நடத்திய 24 மணிநேர கண் விழிப்புப் போராட்டத்தில் 35க்கும் அதிகமான இளைஞர்கள் பங்கேற்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (24ஆம் திகதி) இரவு 7 மணி தொடக்கம் கடந்த சனிக்கிழமை இரவு 7 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

வன்னியில் இலங்கைப் படையினரது போர் முன்னெடுப்புகளினால் இடம்பெயர்ந்து அல்லலுறும் தமிழ் உறவுகளை நினைவுகூர்ந்தும் மற்றும் தமிழ்நாடு முழுவதும் மாணவ சமுதாயத்தால் மேற்கொள்ளப்படும் வகுப்புப் புறக்கணிப்புப் போராட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்காக தமிழக அரசு நிவாரண நிதி ஆரம்பம்

சென்னை,ஒக்.28

இலங்கையில் இன்னலுறும் தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக 'இலங்கைத் தமிழர் நிவாரண நிதியம்' என்ற பெயரில் நிதியம் ஒன்றை தமிழ்நாடு மாநில அரசு ஆரம்பித்துள்ளது. இந்த நிதியத்துக்கு உதவுமாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, மக்களிடம் கோரியுள்ளார்.

இந்த நிதியத்துக்கு காசோலை மற்றும் டிராப்டுகளை பிரதம செயலாளருக்கு அனுப்பலாம் என்றும் முதல்வர் கருணாநிதி நேற்று விடுத்த அறிக்கையில் அறிவித்துள்ளார்.

உணவு மற்றும் உடுப்பு வகைகளை அனுப்ப விரும்புபவர்கள் அவற்றை மாவட்ட கலெக்டர்களிடம் கையளிக்க வேண்டும். அவை ஐ.நா. மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அனுப்பப்படும் என்றும் அவர் கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இங்கிலாந்து - பாக். இடையே சர்ச்சையில் முடிந்த

# ஓவல் டெஸ்ட் ஆட்டத்தின் பெறுபேறை மாற்றும் அதிகாரம் ஐ.ஸி.ஸிக்கு இல்லை

## எம்.ஸி.ஸி. குழு புதுடில்லியில் கூடித் தீர்மானம்

லண்டன், ஒக். 28

இங்கிலாந்து - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் சர்ச்சையில் முடிவுற்ற 2006ஆம் ஆண்டின் ஓவல் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தின் பெறுபேறு தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) அதில் தலையிட்டு வழங்கிய தீர்ப்பை வாபஸ் பெறும்படி எம்.ஸி.ஸி. கோரியிருக்கின்றது.

கிரிக்கெட் ஆட்ட விதிகளை கண்காணித்து வழிநடத்தும் சுயாதீன அமைப்பான எம்.ஸி.ஸி. மேற்படி டெஸ்ட் ஆட்டத்தின் பெறுபேறு விடயத்தில் ஐ.ஸி.ஸி. தலையிட்டு - தன்பாட்டில் முடிவை மாற்றி - தீர்ப்பளித்தமை தவறானது




என்று சுட்டிக்காட்டியிருக்கிறது.

இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் அனில் கும்ப்ளே, டெஸ்ட் அணிகளின் முன்னாள் தலைவர்களான ராகுல் டிராவிட், மைக்கல் அதேர்ட்டன், ஷோன் பொலக், ஸ்டீவ் வோ ஆகியோரை உள்ளடக்கிய எம்.ஸி.ஸி. சர்வதேச கிரிக்கெட் கமிட்டி கடந்த ஞாயிறன்று புதுடில்லியில் கூடி இந்த முடிவை எடுத்திருக்கிறது.

2006 ஓவலில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற நான்காவது டெஸ்டின் நான்காவது நாள் ஆட்டத்தின் தேநீர் இடைவேளையை ஒட்டி அந்த சர்ச்சை வெடித்தது.

அந்த ஆட்டத்துக்கு நடுவர்களாகப் பணியாற்றிய அவுஸ்திரேலியாவின் டரல் ஹெயரும், மேற்கிந்தியத் தீவுகளின் பில்லி டொக்ரோவும், பாகிஸ்தான் அணி பந்தைச் சேதப்படுத்திய குற்றத்திற்காக அந்த அணிக்கு ஐந்து ஓட்டங்கள் தண்டனையாக விதித்தனர்.

அதனை ஆட்சேபித்து மைதானத்திற்குள் இறங்கி விளையாடத் தமது அணியுடன் சேர்ந்து மறுத்துவிட்டார் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம் உல் ஹக்.

இதனால் ஆட்டம் அத்துடன் நிறுத்தப்பட்டது. பாகிஸ்தான் விளையாட மறுத்த காரணத்துக்காக இங்கிலாந்துக்கு வெற்றி வழங்கப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக பாகிஸ்தான் செய்த முறைப்பாட்டின் பேரில் நடுவர் டரல் ஹெயர் சர்வதேச கிரிக்கெட் மத்தியஸ்தர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். எனினும், இதனை ஆட்சேபித்து ஹெயர் தாக்கல் செய்த தொழில் வழக்கு ஒன்றையடுத்து அவரை மீளப் பணிக்குச் சேர்க்குமாறு உத்தரவிடப்பட்டது. ஆனாலும் அதன் பின்ன் உயர்மட்ட ஆட்டங்களில் நடுவர் பணி வகிப்பதிலிருந்து ஹெயர் ஒதுங்கிக்கொண்டார்.

அதேசமயம், கிரிக்கெட் விளையாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம் உல் ஹக்கிற்கு நான்கு ஆட்டங்களுக்கான தடை விதிப்புத் தண்டனை வழங்கப்பட்டது.

இதன் பின்னர் இந்த சர்ச்சை குறித்து விசாரணை நடத்திய ஐ.ஸி.ஸி. (சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில்) அந்த டெஸ்ட் ஆட்டத்தின் முடிவு தொடர்பான நடுவர்களின் தீர்ப்பை ரத்துச் செய்ததுடன் அந்த டெஸ்ட் வெற்றி - தோல்வியின்றி முடிவுற்றதாகக் கருதப்பட வேண்டும் என்றும் அறிவித்தது.

அந்த அறிவிப்பின்படி, அந்த ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 3-0 என்ற கணக்கில் வென்றது என்ற முன்னைய முடிவு 2-0 என்ற கணக்கில் வென்றது என மாற்றியமைக்கப்பட்டது.

ஐ.ஸி.ஸியின் அந்தத் தீர்ப்பையே இப்போது தவறு எனத் தீர்மானித்திருக்கிறது எம்.ஸி.ஸி.

''கிரிக்கெட் சட்டங்கள் 1788இல் எம்.ஸி.ஸியால் வரையப்பட்டவை. அவற்றை யாரும் கண்மூடித்தனமாக மாற்ற முடியாது. ஓர் ஆட்டத்தின் முடிவு தொடர்பாக நடுவர்கள் வழங்கிய தீர்ப்பு, 'பொருத்தமற்றது' என சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் கருதினாலும் கூட, அந்த முடிவை ஐ.ஸி.ஸி. (சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில்) தலையிட்டு மாற்றியமைக்க முடியாது. அதற்கான அதிகாரம் ஐ.ஸி.ஸிக்குக் கிடையாது'' - இப்படி எம்.ஸி.ஸி. கமிட்டியின் தலைவரும் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் முன்னாள் தலைவருமான ரொனிலுயிஸ் தெரிவித்தார்.

## நியூஸிலாந்து - பங்களாதேஷ் டெஸ்ட்: 2 ஆவது நாள் ஆட்டமும் மழையால் ரத்து

நிடாக்கா, ஒக்.28

நியூஸிலாந்து-பங்களாதேஷ் அணிகளிடையேயான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டாக்காவில் கடந்த சனிக்கிழமை தொடங்குவதாக இருந்தது. அங்கு பெய்த பலத்த மழை காரணமாக முதல் ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினமும் பலத்த மழை கொட்டியது. இதனால் 2ஆவது நாள் ஆட்டமும் ரத்துச் செய்யப்பட்டது. அடுத்த 3 நாள்கள் ஆட்டத்தில் தினசரி கூடுதலாக 30 நிமிடங்கள் ஆட்டம் நடைபெறும் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது.

## டெஸ்ட் அணிக்கு தலைமை வகிக்க டோனி தயார் என்கிறார் கபில்தேவ்

டோனி தலைமைப் பதவியை ஏற்ற பிறகு இந்தியக் கிரிக்கெட் அனி புத்துணர்ச்சியுடன் இருக்கிறது. முதலில் அவர் 20 ஓவர் போட்டிக்கு தலைவராக நியமிக்கபபட்டார். தென்னாபிரிக்காவில் நடந்த முதலாவது 20 ஓவர் உலக கோப்பையை அவரது தலைமையிலான இளம் அணி கைப்பற்றி முத்திரை பதித்தது. டிராவிட் தலைமைப் பதவியில் இருந்து விலகியதால் டோனி ஒருநாள் போட்டிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார். அவுஸ்திரேலியாவில் நடந்த 3 நாடுகள் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்று புதிய வரலாறு படைத்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மொஹாலியில் நடந்த டெஸ்டில் அவர் தற்காலிக தலைவராகப் பணியாற்றினார். இதில் 320 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து, 20 ஓவர் போட்டி, ஒரு நாள் போட்டிக்கு தலைவராக இருக்கும் டோனியை டெஸ்டுக்கும் தலைவராக நியமிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் டோனி டெஸ்ட் தலைவர் பதவிக்கு தயாராகி விட்டார் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

டெஸ்ட் தலைமைப் பதவியை ஏற்க டோனி தயாராகி விட்டார். அதற்குரிய அனைத்துத் தகுதிகளும், அனுபவமும் அவரிடம் இருக்கின்றன. தற்போது கும்ப்ளே தலைவராக இருக்கிறார். உடல் தகுதியுடன் இருந்து அவர் சிறப்பாக பந்து வீசினால் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

கும்ப்ளே போன்ற சிரேஷ்ட வீரர்களுக்கு தேர்வுக் குழுவினர் மரியாதை கொடுப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். டெஸ்ட் தலைமைப் பதவியையும் டோனியால் வகிக்க முடியும் என்பதே எனது கருத்து.

டிராவிட், கங்குலி, லக்ஷ்மண் ஆகியோர் 10 ஆண்டுகளுக்கு மேலாகவும், டெண்டுல்கர், கும்ப்ளே 20 ஆண்டுகளாவும் அணியில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் ஓய்வு பெறும் போது அவர்கள் இடத்தை உடனடியாக நிரப்புவது கடினம் - இவ்வாறு கபில்தேவ் கூறியுள்ளார்.

## டில்லியிலும் இந்தியாவுக்கே வெற்றி!

புதுடில்லி, ஒக்.28

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் 3ஆவது டெஸ்ட் டெல்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத் தில் நாளை தொடங்குகிறது. நேற்று முன்தினம் பயிற்சி முடிந்த பிறகு

### டிராவிட் நம்பிக்கை

இந்திய வீரர் ராகுல் டிராவிட் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

இந்த மைதானம் நமக்கு சிறப்பு வாய்ந்ததாகும். நான் இங்கு ஆடிய 6 டெஸ்டிலும் இந்தியா தொடர்ந்து வெற்றி பெற்றிருக்கிறது. அந்தத் தொடர் வெற்றியை 7ஆக நீடித்து, டெஸ்ட் தொடரையும் கைப்பற்றுவோம் என்று நம்புகிறோம்.

மொஹாலி டெஸ்டில் அவுஸ்திரேலிய அணியை எல்லா வகையிலும் முழுமையாகத் தோற்கடித்தோம். நீண்ட கால மாக வெற்றிகளை குவித்த அவர்கள் இந்தத் தோல்வியால் காயப்பட்டிருப்பார்கள். அவர்கள் நிறைய தோல்விகளைப் பார்த்தவர்கள் அல்லர். எனவே, பழைய நிலைமைக்குத் திரும்ப ஆர்வமாக இருப்பார்கள். ஆனால் அவர்களைப் பற்றி நாங்கள் அதிகமாகச் சிந்திக்க வில்லை. போட்டிக்கு தயாராவதில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறோம். அவுஸ்திரேலிய வீரர்கள் இங்கு தங்கள் திறமையை நிருபிக்க விரும்புவார்கள். அவர்களின் சவாலுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் -இவ்வாறு டிராவிட் கூறினார்.


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
சகல துணி வகைகளையும் றெடிமேட் ஆடைகளையும்
மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள



**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்

அமரர்

**அப்புக்குட்டி சின்னத்துரை**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைந்தோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

யா/சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நீர்வேலி. (79514)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மண்ணுக்கு: 07.07.1938
விண்ணுக்கு: 04.11.2002

அமரர்

**கந்தையா கார்த்திகேசு**

(சிவபாதம்)

திதி: அமாவாசை

நடமாடும் உங்கள் மனையில் நீங்கள் படமாய் அமர்ந்தது ஏன்?
பாசம் நிறைந்த தந்தையே உங்களை பறக்கவிட்டுவிட்டோமே
இறைவா எங்கள் தந்தையை எங்கு கொண்டு சென்றாய்?
எத்தனை செல்வங்கள் இருந்தாலும்
எத்தனை இன்பங்கள் வந்தாலும் அவை யாவும் உங்களுக்கு ஈடாகுமா?
ஓடமாய் இருந்தீர்கள் ஓடம்கரை சேரும் முன்னே
ஓடம் கவிழ்ந்த மாயம் என்ன?
அன்பாலும் பாசத்தாலும் ஆசைமொழி பேசி எங்களை
ஆசையோடு அரவணைத்த உங்கள் அழகிய கரங்கள்எங்கே?
இறைவன் வாங்கி விட்டானோ இடையில்!
ஓம் சாந்தி!

தகவல்: மனைவி
பிள்ளைகள்: சுதர்சன், சிவதர்சன், விசயதர்சன், சுகிதர்சன்
மருமக்கள்: தவஈஸ்வரி, ஸ்ரேவாணி, பேரப்பிள்ளைகள்: மதுசன், ஸமீரா.

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய். (சி/555107)

## தேவை

யாழ்.நகர்ப் பகுதியிலுள்ள சைவ உணவகத்துக்கு சிட்டை எழுதுனர் தேவை. (40 வயதுக்கு மேற்பட்டவர்கள்)

தொடர்பு: [illegible]
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா அருளானந்தம் (அருள்)



(முன்னாள் வைரமாளிகை ஊழியர்)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அருளானந்தம் அவர்கள் நேற்று (27.10.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 07, இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (79512)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பொன்னையா சிவபாக்கியம்



கலைவாணி வீதி, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் டென்மார்க்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா சிவபாக்கியம் 26.10.2008 ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சந்திராதேவி, வள்ளிநாயகி, அன்புநாயகி, விக்கினேஸ்வரன், அருந்ததி, லோகமதி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

டென்மார்க்
தொ.பே: 004524252695 (79513)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இராஜிநாமா நாடகத்தை ஒட்டி புரிந்ததும், புரியாததையும்

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினையை ஒட்டிய விடயத்தில், காலத்தை இழுத்தடித்துத் தனது காரியத்தைச் சாமர்த்தியமாக நிறைவேற்றும் கொழும்பின் இராஜதந்திரத்துக்கு மீண்டும் ஒரு தடவை பலியாகியிருக்கின்றது புதுடில்லி.

இம்முறை அதனோடு சேர்ந்து சென்னையும் கட்டையில் ஏறியிருப்பதுதான் புதிய விடயம்.

ஈழத் தமிழர்களுக்கு நியாயம் வேண்டி - அவர்களின் பேரவலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் எண்ணத்துடன் - தமிழகத்தில் 'உரு'க் கொண்டு எழுந்த உணர்வெழுச்சியை - கிளர்ச்சியை - இவ்வளவு சுலபமாக ஒரு நாளில், நீர்த்துப் போகப் பண்ணிய கொழும்பின் 'இராஜதந்திரம்' வியப்புக்குரியதே.

எனினும், புதுடில்லியிலும் சென்னையிலும் அரசியல் சுயலாபக் கும்பல்களின் 'வெட்கக்கேடான' முறையில் அமையும் கையாள்கைகளுக்கு இந்த விவகாரம் உட்பட்டது என்பதால் இப்படியெல்லாம் நடக்கும் என்ற எதிர்பார்ப்பு பல தரப்பிலும் இருந்து வந்ததே என்பதும் மறைக்கப்பாலதல்ல.

கடந்த முப்பத்தியைந்து ஆண்டுகளாக இலங்கை விவகாரத்தை புதுடில்லியும் சென்னையும் கையாண்டு வருகின்ற முறைமையை விளங்கப்படுத்துவதற்கு சிறிய கதை ஒன்றை ஒரு வாசகர் ஆங்கில நாளிதழ் ஒன்றில் கருத்தாகக் குறிப்பிட்டிருந்தார்.

காது கேட்காத இருவர் வழியில் எதிரெதிரே சந்தித்துக் கொண்டார்களாம். ''குளிக்கப் போகின்றீர்களா?'' - என்று ஒருவர் மற்றவரிடம் கேட்டார். அதற்கு அவர், ''இல்லையில்லை. நான் குளிக்கப் போகிறேன்.'' - என்று பதிலளித்தாராம். அதற்கு முதலாமவர் ''அப்படியா, நான் என்னவோ நீங்கள் குளிக்கப் போகின்றீர்களாக்கும் என்றல்லவா நினைத்தேன்!'' எனக் கூறினாராம்.

- இவ்வாறு ஒருவர் பேசுவதை மற்றவர் புரியாமல் உரையாடுகின்ற செவிடர்களின் பேச்சுப்போல இருக்கின்றது இலங்கை இனப்பிரச்சினை விடயம் தொடர்பான கொழும்பு - புதுடில்லிப் பேச்சுகளும் அதையொட்டிய இழுபறிகளும்.

''இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கிடையாது. அரசியல் தீர்வே ஒரே வழி. அதை முன்வையுங்கள்!'' - என்று இந்தியா படித்துப் படித்துக் கூறுவதும் -

''ஆமாம். அரசியல் தீர்வே வழி. அதற்கான திட்டத்தை வைப்போம்!'' - என்று புதுடில்லிக்குக் கூறியவாறே, அமைதித் தீர்வு எத்தனத்தை அடியோடு கைவிட்டுவிட்டு புலி எதிர்ப்பு யுத்தத்தை முழுக் குரூர - கொடூர - முனைப்பில் கொழும்பு முன்னெடுப்பதும் -

''முதலில் புலிகளைச் சம்ஹாரம் செய்தல். பின்னர் தீர்வு பற்றிப் பார்க்கலாம்.'' - என்று கொழும்பு அரசு தென்னிலங்கைக்குப் பகிரங்கமாகக் கூறியபடி தனது யுத்தத் திட்டத்தை வெளிவெளியாகத் தொடர்வதுமாகக் கட்டவிழும் விடயங்களைப் பார்க்கும்போது கொழும்பு - புதுடில்லிப் பேச்சும், கருத்துப் பரிமாற்ற முனை தொடர்பாடல்களும் இரு செவிடர்கள் இடையே நடப்பவை போலத்தான் தோன்றுகின்றன.

பேச்சு மூலமான அமைதித் தீர்வை புதுடில்லி வற்புறுத்துவதும், 'ஆமாம்' என்று தலையாட்டியபடி தனது யுத்த முனைப்பைக் கொழும்பு தொடர்வதும், அதைத் தடுக்கத் திராணியில்லாத இப்பிராந்திய வல்லாதிக்க (?) நாடான இந்தியா, அந்தப் போர்முனைப்புப் போக்குக்கு இராணுவ ரீதியிலான உதவிகளை எல்லாம் மறுபக்கத்தில் வாரி வழங்கிக்கொண்டு வாளாவிருப்பதுமாக இடம்பெறுகின்ற சம்பவங்களின் சூட்சுமமும் அதற்குள் புதைந்து கிடக்கும் அர்த்தங்களும் 'காது கேட்காத செவிடர்கள் போல' நடிக்கின்ற புதுடில்லி, சென்னை அரசியல் தலைவர்களுக்கு விளங்குகின்றனவோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இப்பிரச்சினையில் அல்லற்பட்டு, அவலப்படுகின்ற அப்பாவி ஈழத் தமிழர்களுக்கு நிச்சயம் புரியவில்லை என்பதுதான் நிஜம்.

இலங்கையில் கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சினைக்காகத் தமிழகத்தில் கிளர்ந்தெழுந்த உணர்வெழுச்சியை வெறும் எண்ணூறு தொன் நிவாரணப் பொருள்களை வன்னி மக்களுக்கு இலங்கை அரசு ஊடாக அனுப்புவது என்ற தீர்மானத்தின் மூலம் அடக்கி விடத் தெரிந்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் தந்திரத்தின் ஆழமும் ஈழத் தமிழர்களுக்குப் புரியவேயில்லை.

ஈழத்தில் போரை நிறுத்தச் செய்வதற்குக் காத்திரமான நடவடிக்கை எடுக்காவிட்டால் இரண்டு வார காலத்துக்குள் தமிழக எம்.பிக்கள் அனைவரும் கூண்டோடு இராஜிநாமா என்ற அறிக்கை - அறிவிப்பு - வெளியான பின்னர், அந்தக் காலக்கெடு முடிவடைய இரண்டு நாள்கள் இருக்கையிலேயே, - புதுடில்லி அரசுத் தலைமையின் வெறும் வாய்ச்சொல் செய்தி ஒன்றை வைத்துக் கொண்டே, அந்த முன்னைய அறிவிப்பைக் குப்பையில் தூக்கி எறியும் விதத்தில் 'இராஜிநாமா அறிவிப்பு நாடகத்தின்' வாபஸ் கட்டம் அரங்கேறியது எங்ஙனம் என்பதும் ஈழத் தமிழர்களுக்குப் புரியவில்லை.

இவ்வாறு புதுடில்லி, சென்னை, கொழும்பு ஆகிய முத்தரப்புகளும் கூட்டுச் சேர்ந்து அரங்கேற்றிய இந்த நாடகத்தை ஒட்டி ஈழத் தமிழர்களுக்குப் பல விடயங்கள் புரியாமல் போனாலும் ஒரேயொரு விடயம் மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது.

அது - நம் கையே நமக்கு உதவி. பிறரை நம்பிப் புண்ணியமில்லை - என்பதுதான்.

# தெல்லிப்பழைக்கு கதிர்வீச்சுச் சிகிச்சைபெறும் புற்றுநோயாளர்கள் மனக்கிலேசம்

யாழ்ப்பாணம், ஒக்.28

தெல்லிப்பழை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்குச் செல்லும் நோயாளர்கள் அங்கு செல்வது குறித்து பெரும் மனக்கிலேசத்துக்கும் குழப்பத்துக்கும் ஆளாகி உள்ளனர். தெல்லிப்பழைச் சோதனைச் சாவடிக்கு அப்பால் பயணம் செய்வதில் ஏற்பட்டுள்ள மாற்றமே அதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை, தெல்லிப்பழைப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்கு கதிர்வீச்சு சிகிச்சைக்கெனச் செல்லும் நோயாளர்கள், யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவின் வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். இராணுவச் சோதனை நிலையத்தில் வைத்து வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டது.

அதனால் நோயாளர்கள் எவ்வித மனக்கிலேசமும் இன்றி அங்கு சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பினர். அவர்களுடன் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவின் வைத்திய நிபுணரும் மற்றும் அவரது உதவியாளர்களும் கூடச் செல்வது உண்டு.

ஆனால் நேற்றுத் திடீரென தெல்லிப்பழை கதிர்வீச்சு நிலையத்துக்குச் செல்லும் வாகனத்தை இனிமேல் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரே ஓட்டிச் செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு, அதன் பிரகாரமே - அந்த ஒழுங்கிலேயே - நோயாளர்கள் கதிர்வீச்சு நிலையத்துக்குச் சென்று திரும்பினர்.

இதனால் தெல்லிப்பழை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்குச் செல்லவேண்டிய நோயாளர் மத்தியில் ஒரு வகையான பீதியும் மனக்கஷ்டமும் தோன்றியுள்ளது.

தெல்லிப்பழைக்குச் சென்று சிகிச்சை பெறும் நோயாளர்களின் மனநிலை மற்றும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து 512 ஆவது படையணியின் சிவில் நிர்வாக அலுவலர் கேணல் அரிக்வெலிடம் எடுத்துக்கூறப்பட்டிருப்பதாகப் புற்றுநோய்ச் சிகிச்சை வைத்திய நிபுணர் என். ஜெயக்குமார் தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளையின் கவனத்துக்கும் இவ்விடயம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கதிர்வீச்சு சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்கள் உரிய தவணைகளில் அதனைப் பெறமுடியாமற் போகும் பட்சத்தில், அவர்களின் உடல்நிலை மேலும் பாதிக்கப்படும் என்று வைத்திய வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. (அ)

# சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுவது காலத்தின் கட்டாயம்; அனைவரும் ஒன்றுபடுவோம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் அறைகூவல்

அச்சுவேலி, ஒக்.28

நீண்டகாலமாக இருந்து வரும் அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாட்டை முன்வைத்து 30 ஆம் திகதி - நாளைமறுதினம் வியாழக்கிழமை - நடத்தப்படும் சுகவீனப் போராட்டத்தில் ஈடுபடுவது காலத்தின் கட்டாயமாகும். அனைத்து ஆசிரியர், அதிபர்களும் தமது உரிமையை நிலைநாட்ட ஒன்றுபட்டுப் பாடுபடுவோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

சுகவீனப் போராட்டம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் எஸ்.சரவணபவானந்தன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நீண்ட காலமாக இருந்துவரும் சம்பள முரண்பாட்டை முன்வைத்து சுகவீனப் போராட்டத்தில் ஈடுபடுவது காலத்தின் கட்டாயம்.

சுகவீனப் போராட்டம் இன, மொழி அடிப்படையில்- யுத்தம், சமாதானம் என்ற வகையில் நோக்க வேண்டிய ஒன்றல்ல. இது ஆசிரியர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை - இதில் யாவரும் சுய மாக ஈடுபட வேண்டும்.

ஆசிரியர் சங்கங்களின் போராட்டங்களில் மொழிவாரியாகத் தமிழ் ஆசிரியர்கள் முரண்பாடாக நடந்து கொள்வதாகத் தேசிய ரீதியில் கருத்தோட்டம் நிலவுகிறது. இது தமிழ் ஆசிரியர் வரலாற்று பின்னணியில் கறையாகப் படியக்கூடாது.

ஆசிரியர்களின் போராட்டம் மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துவது என்பது யதார்த்தத்துக்குப் புறம்பானது. ஆசிரியர்கள் பொருளாதார வளத்துடன் சுயகௌரவத்துடன் நிமிர்ந்து நிற்பது மாணவர்களின் கல்வியை வளம்படுத்தும்.

அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் ஆசிரியர்களின் வருமானத்தை மேல்நிலைப் பெறவிடாமல் தடுப்பதைக் கண்டித்துத் துணிந்து எமது உரிமைக்காகப் போராடப் புறப்படுவோம் - என்றுள்ளது. (202-11)

# திருமலையில் சிறைச்சாலை அதிகாரி கடத்தப்பட்டார்

திருகோணமலை, அன்புவழிபுரம் பகுதியில் வைத்து சிறைச்சாலை அதிகாரி ஒருவர் வெள்ளை வானில் இனந்தெரியாத நபர்களினால் நேற்றுக் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அன்புவழிபுரம், மாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த பி.கௌரிநாதன் என்பவரே கடத்திச் செல்லப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

உறவினர் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த சமயமே அவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தீவக ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள்

வேலணை, ஒக்.28

தீவக வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் விசேட கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான செயலர்வுகள் இன்று தொடக்கம் 3 தினங்களுக்கு யாழ்.கொட்டடி நவசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (202-267)

# பல்கலைக்கு 13 பேர் தெரிவாகினர்

சண்டிலிப்பாய், ஒக்.28

கடந்த வருடம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களில் 13 பேர் பல்கலைக்கழகங்களிற்குத் தெரிவாகியுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய மேற்படி கல்லூரி மாணவர்களில் 32 சதவீதம் பேர் சித்தியடைந்துள்ளனர் என்று கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட 10 வருடங்களில் அதிகளவு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வது இதுவே முதன்முறையென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (201)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 13 | 29.10.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | பிரதமை |
| | முழுவதும் |
| | சுந்தஷட்டி விரதாரம்பம் |
| நட்சத்திரம் : | சுவாதி |
| | மு.இ. 08.56 வரை |
| சுபநேரம் : | 04.33-06.03 |
| ராகுகாலம் : | 12.03-01.33 |




# தடுப்புக்காவலில் உள்ள தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு ஆதரவாக பிரான்சில் கவனயீர்ப்புப் போராட்டம்

பாரிஸ், ஒக்.28

பிரான்சில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாள் பொறுப்பாளர் பரிதியும் ஏனைய செயற்பாட்டாளர்களும் இணைந்து தொடங்கியுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக அங்கு வாழும் தமிழர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தினை நடத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை காலை 8 மணிக்கு பரிதி,உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி வரை தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டார்.

இவருக்கு ஆதரவாக ஞாயிறன்று 2 மணியளவில் பாரிஸ் குடியரசு சதுக்கத்தில் ஒன்றுகூடிய தமிழ் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

தடுப்புகாவலில் உள்ளோரால் நடத்தப்பட்டு வரும் உண்ணா விரதப் போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:

* சிறிலங்கா அரசால் மனித உரிமைகள் மீறப்படுதலை பிரசாரப்படுத்தல்.
* 2லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் இருப்பதை அம்பலப்படுத்தல்.
* அரச சார்பற்ற நிறுவனங்களை சிறிலங்கா அரசு வெளியேற்றி மக்கள் மீது எறிகணை வீச்சுக்களையும் வான் குண்டுத் தாக்குதல்களையும் நடத்துவதை நிறுத்துதல்.
* தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதால் அவர்கள் மீதான ஐரோப்பிய நாடுகளின் தடை நீக்கப்படுதல்.

பிரான்ஸ் காவல்துறையினரால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் பரிதி கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவருடன் மேலும் சில செயற்பாட்டாளர்களும் தடுப்புக்காவலில்உள்ளனர். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.கற்கோவளம்
மெ.மி.த.க.பாடசாலை மாணவி
**இராமகிருஷ்ணன் தமிழரசி**
நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகள் பெற்று முதன்மைச் சித்தி பெற உதவிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்: நா. பாக்கியநாதன் (மாமா) குடும்பத்தினர்.
கற்கோவளம். (ஏ/555611)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி
**செல்வி இரத்தினேஸ்வரி கிருஷ்ணாகினி**
மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.
759, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். உறவினர்கள்.
(79394)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/கட்டுடை சைவ வித்தியாசாலை அதிபராக பதவியுயர்வு பெற்றுள்ள எமது கல்லூரி ஆசிரியர்
**திரு.து.சிவஞானம்**
(B.A,Dip.in.Ed.)
அவர்கள் தமது பணியில் சிறந்து மேன்மை பெற்றிட மனமுவந்து வாழ்த்துகிறோம்.
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. ஆசிரியர் நல்லுறவு மன்றம்.
(79459)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 26★01★1939 இறப்பு 20★10★2007
**அமரர் வல்லிபுரம் வேலாயுதம்**
(ஓவியர்)
திதி: (28.10.2008) அமாவாசை

அப்பா உங்கள் சமாதியோ அந்த நதிக்கரையில்
உன் தங்கை விடும் கண்ணீர் உங்களை அங்கு நனைத்திடுமே.
அண்ணா... நீங்கள் உங்கள் மச்சான், மருமகன், மகன் அவர்களுடன் சென்றீரோ...

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்:
மனைவி, சகோதரி: கண்மணி,
மகன்: மயூரன்.
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை. (79510)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தர்சினி பிரதீபன் அவர்களின் அன்புத் தந்தை
**க.கணேசமூர்த்தி**
அவர்கள் இறைபதம் எய்தியமையினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், சாவகச்சேரி. பாடசாலைச் சமூகம்.
(79509)


# நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.28

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவுப் பரிச ளிப்பு விழாவும் நாளை புதன் கிழமை காலை 8.30 மணிக்கு துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்த சயனன் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினர் களாக யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத் திட்டப் பணிப்பாளர் மருதலிங்கம் பிரதீபன், திருமதி ரஜனி பிரதீபன் ஆகியோர் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சற்குணானந்தன் கைலாசநாதன், வட்டு இந்து நவோதயப் பாட சாலை ஆசிரியை திருமதி பவானி கைலாசநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். நினைவுப் பேருரையை தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வுபெற்ற பிரதிப் பொது முகாமையாளர் நடராஜா சிவபால கணேசன் நிகழ்த்துவார். நிகழ்வில் 'மகாஜனன்' நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (50-201)


## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திரு நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு, உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(79434) -ஓர் அடியான்.


## சிறுவர் தின விழா

வலிதென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர் தினவிழா அண்மையில் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

# கலைஞர் விவரங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையால் வெளியிடப்படவுள்ள கலைஞர் விவரத்திரட்டுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்னர் கலைஞர்கள் தமது விவரங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி திகதிக்குப் பின்னர் வந்துசேரும் கலைஞர் விவரங்களை கலைஞர் விவரத்திரட்டில் இடம்பெறமாட்டாது என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். கலைஞர்களது விவரங்களை பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (201-236)


## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள், பிரதான வீதியில் புதிய நீதிமன்றத்துக்கு முன்பாக 4 பரப்புக் காணி தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. மேலும் பாங்சால் வீதியில் மூன்றாம் குறுக்குத் தெருவில் 4½ பரப்புக் காணியும் விற்பனைக் குண்டு.
தொடர்பு: நவலிங்கம்
தொ.பே.:0779522521, 0776111419
அல்லது S.ஜெகான், கச்சேரியடி.
தொ.பே.:0776589415, 021222 2426
(79420)

## அமெரிக்காவிற் குடியேறுங்கள் PR VISA லொத்தர் மூலம்.

அமெரிக்காவில் வேலை செய்ய, உயர்கல்வி கற்க முடியும்.

மணமுடித்தவர்கள் விண்ணப்பிக்க Call 0775811106
மணமுடிக்காதவர் 18 வயதிற்கு மேல், கபொத சாதரத்தில் பூரணசித்தி இருப்பின் 30/11/2008 முன்னர்.
A. ஸ்ரூடியோவில், புதிதாக எடுத்த ஒரு வீஸா படத்துடன்,
B. அடையாள அட்டையிலுள்ளபடி பெயர் ஆங்கிலத்தில் எழுதவும்.

Last/Family Name ______
First Name ______
Middle Name (If have only) ______
Date of Birth (DD/MM/YR) ______
Birth Place ______
Gender Male ☐ Female ☐ Not Married and Don't have children ☐
G.C.E O/L Completed ☐ University Student ☐
Graduate ☐ Doctorate ☐
Telephone ______
Address ______

இதனை வெட்டி போட்டோ பிரதி செய்யவும்

அருகிலுள்ள இலங்கை வங்கியில் ரூபா 300/- இனை BBS Netting, A/C 7244197, Bank of Ceylon, Wellawatte Branch என்ற கணக்கிலிட்டு, விபரம், படம், வங்கிரசீது என்பனவற்றை பதிவுத்தபால் மூலம் எமக்கு அனுப்பவும். இணைபத்தை மூலம் விண்ணப்பித்தபின் ரசீதும் தங்கள் படமும் கவனமாகப் பதிவுத்தபால் மூலம் மீள உங்களுக்கு அனுப்பப்படும்.



Director, BBS Netting,
3/14, Pinwatta Road, Dehiwala.

## 31ஆம் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மண்ணில் 22.07.1940
விண்ணில் 28.09.2008

அமரர்
**நா.மா.கந்தசாமி**
(மூத்த பத்திரிகையாளர், அரச மருந்தாளர்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்ட எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா இறைகழலில் அமைதிபெற ஈரவிழிகளுடன் பிரார்த்திக்கின்றோம்.

வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (28.10.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர் நோயுற்று இருந்தபோது மருத்துவம் செய்த மருத்துவர்கள், தாதியர்களுக்கும் ஆதரவளித்தோருக்கும் அமரரின் இழப்பினையும் சேவையையும் பிரசுரித்து அஞ்சலி செலுத்திய, உதயன், தினகரன், தினக்குரல் பத்திரிகை நிறுவனங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்தோருக்கும் மலர் வளையங்கள், மாலைகள் வைத்து மரியாதை செலுத்தியோருக்கும் தபால், தந்தி,தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் துயரிற் பங்கு கொண்டு ஆறுதல் கூறி எம்மைத் தேற்றியோருக்கும் மற்றும் சகல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனம் நெகிழ் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. (79415)
மனைவி - திருமதி நாகேஸ்வரி கந்தசாமி
மகள் - திருமதி சாந்தினி அருளானந்தம்.


## தேவை - செய்தியாளர்கள்



கீழே தரப்பட்ட பிரதேசங்களில் செய்தியாளர்களாகப் பணிபுரிவதற்கு அனுபவம் உள்ளவர்களிடமிருந்து- நாட்டம் கொண்டவர்களிடமிருந்து- விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- 21 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
- நாட்டு நடப்புக்களைக் கண்டறிவதில் நாட்டம் உள்ளவர்கள்.
- ஜி.சி.ஈ.உயர்தரத்தில் சித்தி அடைந்திருப்பது விரும்பத்தக்கது.
- தமிழ் மொழியில் சரளமாக எழுதும் ஆற்றல்தேவை

கடைசியாக பயின்ற பாடசாலை அதிபர், வாழ்விடப் பகுதி கிராமசேவகரிடம் இருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ், கல்வித் தராதரப் பத்திர சான்றிழ்களுடன் (பிரதிகள்) மற்றும் சிபார்சு செய்யக்கூடிய தகுதி உள்ள பிரமுகர்களின் நற்சான்றிதழ்களுடன் 04.11.2008 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

*வட்டுக்கோட்டை *அராலி *சித்தன்கேணி
*மூளாய் *மாதகல் *இளவாலை
*கொக்குவில் *இணுவில் *சண்டிலிப்பாய்

பிரதம ஆசிரியர்,
உதயன் 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் மைதானத்தைப் புனரமைக்க உதவுமாறு கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஒக்.28

மாரி காலத்தில் வெள்ளத்தில் மூழ்கி விடும் நிலையிலுள்ள ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்புச் செய்து தருமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.


கல்லூரி அதிபர் ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்திலேயே அநேகமான வலயமட்ட, கோட்டமட்ட போட்டிகள் நடைபெறுவது வழமை. மழை காலங்களில் இந்த மைதானம் வெள்ளக் காடாக மாறி விடும். இதனால் மாணவர்கள் பயிற்சியை மேற்கொள்ளவோ போட்டிகளை நடத்தவோ முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே மைதானத்துக்கு மண் நிரப்பப்பட்டு மைதானம் உயர்த்தப்படவேண்டியுள்ளது.

மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த சுற்றுமதிலும் முற்றாக அழிவடைந்துள்ளது. அதனையும் மீளப் புனரமைப்புச் செய்யவேண்டியுள்ளது.

கிரிக்கெட் ஆடுகளம், கூடைப்பந்தாட்டத்திடல் என்பனவும் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன. இந்த மைதானத்திலேயே பாடசாலையின் உடற்பயிற்சி அணி பயிற்சியினைப் பெற்றுத் தேசிய மட்டச் சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே உடற்பயிற்சி அணிகளாக போன்று ஏனைய அணிகளையும் சாதனை அணியை உருவாக்க விரைவாக மைதானத்தைப் புனரமைப்புச் செய்து தருமாறு கல்லூரியின் அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (202-127)




# தொழில்திறன் பயிற்சிநெறிகளுக்கு பெண்கள் விண்ணப்பிக்கலாம்

நல்லூர்,ஒக்.28

கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும் தொழில்திறன் டிப்ளோமா, தொழில்திறன் சான்றிதழ் பயிற்சிநெறிகளுக்குப் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாகப் பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நவீன காலத்திற்கேற்ற வகையில் உயர் தொழில்நுட்பங்களுடன் கூடிய தையல், மனையியல், கைவேலை, பெப்ரிக் பெயின்டிங், பச் அலங்காரம், அழகுக்கலை, உள்ளக அலங்காரப்பயிற்சி, வைபவங்களுக்கான அலங்கரிப்புக்கலை, அடிப்படை ஆடை வடிவமைப்புக்கலை மற்றும் சந்தை தொடர்பான அறிவு, கணக்குகளைப் பேணுவது தொடர்பான அடிப்படை அறிவு போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

டிப்ளோமாப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களை யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகள் 'மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தொழில்திறன் சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை வேலணை, சாவகச்சேரி, உடுவில், நல்லூர், நெடுந்தீவு, கோப்பாய், பருத்தித்துறை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, மருதங்கேணி பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக அனுப்புதல்வேண்டும். டிப்ளோமாப் பயிற்சிநெறிக்கு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையைப் பூர்த்திசெய்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தையல் வேலை, மனையியல், சுகாதாரம் அல்லது உடல் நலவியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் திறமைச் சித்தி களுடன் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைக்கு மேற்படாமல் சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

தையல், மனையியல் சம்பந்தமான அடிப்படை அறிவு அவசியம். கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் தையல்/ மனையியல் சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொழில்திறன் சான்றிதழ் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையைப் பூர்த்திசெய்தவர்க ளாக இருத்தல்வேண்டும்.

அல்லது தரம் 9ஐப் பூர்த்தி செய்தவர்களாகவும் எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

நேர்முகப் பரீட்சை மூலம் பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

சுயவிவரத்துடன் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-111)

# சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் வலி.கிழக்கில் 735 பேர் இணைந்தனர்

அச்சுவேலி,ஒக்.28

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் ஓய்வூதியத்திட்டத்தில் இந்த வருடம் 735 பேர் இணைந்துள்ளனர்.

சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட பிரிவினரில் சுயதொழில் செய்வோர் தமது 60 வயதுக்குள் இணைந்து பயன்பெறலாம் என வலி. கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

இலங்கை சமூக பாதுகாப்புச்சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதியம், மரணப் பணிக்கொடை உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் கிடைக்கவிருப்பதால் சுயதொழில் செய்வோர் தமது எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அதில் இணைந்துகொள்ளமுடியும்.

"இந்த வருடத்தில் மேற்படி திட்டத்தில் 1000 பேர் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற இலக்குடன் வேலைத்திட்டம் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்வது தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்படவேண்டும்" என வலி.கிழக் குப் பிரதேச செயலர் பிரிவுச் சமூகசேவை அலுவலர் வே.தபேந்திரன் தெரிவித்தார். (202-11)

# கரவெட்டி மத்திய மருந்தகத்தில் நோயாளர்களுக்கு இலைக்கஞ்சி

யாழ்ப்பாணம்,ஒக்.28

கரவெட்டி மத்திய ஆயுள்வேத மருந்தகத்தில் நோயாளர்களுக்கு இலவசமாக இலைக் கஞ்சி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திட்டம் வைபவ ரீதியாகக் கடந்த புதன்கிழமை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச ஆயுள்வேத வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.குமுதினியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பொறுப்பு வைத்திய அதிகாரி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வட மாகாணச் சுதேச மருத்துவப் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பிரதி புதன்கிழமைகளில் முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நோயாளர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இரத்தசோகை, உடற்சோர்வு, உடற்தளர்ச்சி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் போஷாக்குக் குறைந்த பிள்ளைகளும் பயனடைவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

# கரவெட்டிப் பிரதேச சிறுவர், முதியோர் விழா

கரவெட்டி, ஒக்.28

வடமராட்சி கரவெட்டிப் பிரதேச செயலக சிறுவர், முதியோர் தினவிழா எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலக முன்னாள் கணக்காளர் லயன் கே.தணிகாசலம், யாழ்.சாந்திகம் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை, கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி க.அம்பலவாணர் ஆகியோர் கலந்துகொள்வர். (201-236-70)

# செயலமர்வு

வேலணை,ஒக்.28

தீவக வலயத்தில் ஆரம்பக்கல்வி கற்பித்தல் முறையியல் செயலமர்வு கடந்த 23ஆம் திகதி நடைபெறாதமையால் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை அதுகொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது. சகல ஆசிரியர்களும் தவ றாது சமுகமளித்து பயிற்சியில் கலந்துகொள்வதுடன் அன்றைய தினம் தங்களுக்குரிய கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ளலாம் என தீவக வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201)




பருத்தித்துறை ஜே.சி.மெடிக்கல் கிளினிக் திறப்புவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கிளினிக்கை நாடா வெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் -

நோயாளர் ஒருவருக்கு வைத்திய உதவி அதிகாரி செல்வி எஸ்.சாந்தி பரிசோதனை செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# சணல் உற்பத்தியை பெருக்க உதவி நடவடிக்கைகள்

தொண்டைமானாறு,ஒக்.28

'வேள்ட் விஷன்' நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து சேதனப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இதன் ஓர் அங்கமாக சணல் உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

சணல் உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு சணல் விதைகள், கிருமிநாசனி மற்றும் உதவித்தொகை என்பவற்றை வழங்கி அவை வருகின்றன.

அத்துடன் விவசாயிகளிடமிருந்து கிலோ நூறு ரூபா வீதம் சணல் விதைகளைக் கொள்வனவு செய்தும் வருகின்றன.

அந்தவகையில் அண்மையில் புலோலி மேற்கு, கெருடாவில் கிழக்கு, கெருடாவில் வடக்கு, கெருடாவில் தெற்கு ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு மேற்படி உதவி வழங்கப்பட்டது. (202-253)

# உடுப்பிட்டியில் இரண்டு வர்த்தக நிலையங்களில் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டு

## சந்தேகத்தின்பேரில் இருவர் கைது

உடுப்பிட்டி, ஒக்.28

உடுப்பிட்டியில் இரு வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இராணுவம் மற்றும் பொலிஸாரின் தீவிர தேடுதலினால் சந்தேகத்தின்பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் பொருள்களும் மீட்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு உடுப்பிட்டி நவிண்டில் வீதியில் ஒரே கட்டடத் தொகுதியிலுள்ள மெட்றோ வைற்சொப், அகிலன் ரி.வி., டெக் றிப்பயர் போன்ற இரு வர்த்தக நிலையங்களிலுமே கதவுகள் உடைக்கப்பட்டுசுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

மேற்படி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் வெள்ளிக்கிழமை மாலை வர்த்தக நிலையங்களைப் பூட்டிவிட்டு வீடு சென்று மறுநாள் [illegible] காலை வந்தபோது வர்த்தக நிலையங்களின் கதவு களை உடைத்துப் பொருள்கள் களவாடப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இது தொடர்பாக வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதையடுத்து பொலிசார் உடுப்பிட்டி, நவிண்டில், குஞ்சர்கடை, வல்வெட்டித்துறை போன்ற இராணுவ முகாம்களின் படையினரின் உதவியுடன் பெருமெடுப்பிலான தேடுதல் நடவடிக்கையை முடுக்கி விட்டனர். கம்பர்மலை, விராம்பத்தை என்னும் இடத்திற்கு அண்மையில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் ஒத்துழைப் பினால் அச்சூழலில் உள்ள வீடுகளின் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த களவாடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன.

மேலும் இத் திருட்டுடன் சம்பந்தப்பட்ட சிலர் தலைமறைவாகியுள்ளனர். அவர்களையும் கைதுசெய்வதற்கான தேடுதல் நடவடிக்கைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (202-70)

# வடமராட்சி கிழக்கில் விதைநெல் விநியோகம்

வடமராட்சி,ஒக்.28

வடமராட்சி கிழக்கில் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களம் இதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த அம்பன், குடத்தனை கிராமங்களைச் சேர்ந்த 15 விவசாயிகளுக்கு மேம்படுத்தப்பட்டுள்ள நெல்லினங்கள் வழங்கும் நிகழ்வு வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.சிறீஸ்கந்தகுமார், அம்பன் கிராம அலுவலர் எஸ்.வித்தியாபதி ஆகியோர் கலந்துகொண்டனர். அம்பன் விவசாயப் போதனாசியர் சொ.சிவகுமார் நெற்செய்கை தொடர்பான பயிற்சிகளை விவசாயிகளுக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபரும் அம்பன் கிராம அலுவலரும் விதைநெல் விநியோக நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (201-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 180 ஆவது நாள் நினைவஞ்சலி



## திருமதி விசுவலிங்கம் சசிகலா (மீனா)

தோற்றம்
11.02.1966

மறைவு
28.04.2008

அன்பு நிறைந்த எமது அருமைச் சசிகலாவே
ஆசையுடன் பேசுவோமே? இன்று எத்தனை நாளாச்சு?
இன்ப வாழ்வில் இணை பிரியாமல் வாழ்வதற்கு
ஈர நெஞ்சில் ஏனோ இடம் கிடைக்கவில்லை!
உலகம் போற்றி நிற்கும் உத்தமியாய் நீ இருக்க;
ஊர் முழுவதுமே உன்னை ஏற்றுக்கொள்ளவில்லையே!
எரியும் நெருப்பினிலே உன் பொன்னுடம்பு பொசுங்கினதோ?
ஏனோ எமைத் தவிக்க விட்டு எங்குதான் சென்றாயோ?
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்பாயே!
ஒருவரிடமும் சொல்லாமல் ஓடி ஒளிந்துபோனதென்ன?
ஓங்காரக் கணபதியின் திருத்தாள் சேர்ந்தாயோ?

இன்று உனை நினைத்து பதறித்துடிக்கிறோம்!
இங்கு நீ வந்து உன் திருமுகம் காட்டாயோ?
எங்கு தேடியும் உன்னைக் காண முடியவில்லையே!
ஏந்திழையாள் சசிகலாவே! உன் குரல் இனிக் கேட்குமோ?
ஏங்கி ஏங்கி நாம் தினம் தினம் சாகின்றோம்! அன்பே!!
நீயில்லாமல் வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா?
தெய்வமே! நீ வந்து உன் தரிசனத்தைத் தந்துவிடு!!
உன்னை நினைத்தபடியே நாம் இங்கு வாழ்கின்றோம்!
'ஓம் சக்தி!' என்று நீ தெய்வத் திருவடியில் அமைதி பெறு!

**ஏ.லிங்கம்** (கணவர்),
**சகோதரர்கள்.**

நுணாவில் மேற்கு,
மடத்தடி,
சாவகச்சேரி.

(79494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியர்:- சோ.கிருஷ்ணதாஸ்,
யாழ்.இந்துக் கல்லூரி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

T / 32 / I — **கணிதம் - II** — Two hours

* விடைகள் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட வேண்டும்.
* பகுதி 'A' இல் 6 வினாக்களில் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.
* பகுதி 'B'யில் 6 வினாக்களில் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.
* r ஆரை உயரம் h உடைய உருளையின் கனவளவு $\pi r^2h$, r ஆரை உயரம் h உடைய கூம்பகத்தின் கனவளவு $1/3\pi r^2h$ ஆகும்.

## பகுதி A

01. a) $A=\begin{pmatrix}3 & 1\\ -1 & 2\end{pmatrix}$ $B=\begin{pmatrix}1 & 0\\ 0 & 1\end{pmatrix}$ $C=\begin{pmatrix}-2 & -1\\ 1 & -1\end{pmatrix}$

ஆயின், பின்வரும் தாயங்களைக் காண்க.
1) 2B
2) 1. A + C ஐக் காண்க
   2. பெறப்படும் தாயத்தின் சிறப்புப்பெயர் யாது?

b) 1. சுருக்குக. $\frac{x}{(x-y)^2}-\frac{y}{(y-x)^2}$
   2. சுருக்கி நேர் சுட்டியாகத் தருக. $\frac{(a^{-3}b^2)^{-1}x\ c^0}{b^2}$


(2,3,3,2 = 10 புள்ளிகள்)

02. குறிப்பிட்ட தினத்தில் நூல்நிலையம் ஒன்றில் குறித்த நாழிதழ் ஒன்றை வாசிப்பதற்கு அங்கு வந்த வாசகர்களுக்கு செலவாகிய நேரம் பற்றிய தகவல் கள் பின்வருமாறு.

| வாசிக்க எடுத்த நேரம் (நிமிடங்கள்) | 3-5 | 5-7 | 7-11 | 11-15 | 15-17 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் (வாசகர்களின் எண்ணிக்கை) | 5 | 6 | 14 | 12 | 4 |

மேலுள்ள தகவல்களைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
1) அன்றைய தினம் அந்நாளிதழை வாசித்த வாசகர்களின் எண்ணிக்கை யாது?
2) ஆகார வகுப்பாயிடை யாது?
3) மேற்தரப்பட்ட தகவல்களைக் காட்டும் வலையுருவரையத்தை வரைக.
4) அவ்வலையுரு வரையத்தில் மீடிறன் பல்கோணியை அமைக்குக.
5) அந் நாழிதழை வாசிப்பதற்கு 7 நிமிடங்களுக்கு அதிகமாகச் செலவழித் தோரின்தொகை முழு வாசகர்களின் தொகையின் என்ன பின்னமாகும்?

(1, 1, 4, 2, 2 = 10 புள்ளிகள்)

03. 1) lg 0.1 இன் பெறுமானம் யாது?
2) $4^{2x-½}=8$ எனின், x இன் பெறுமானம் காண்க.
3) மடக்கை விதிகளைப் பயன்படுத்தி x இன் பெறுமானம் காண்க.
$2\log x + 2\log 5 = \log 625$
4) 

தரப்பட்டுள்ள முக்கோணி ஒரு சமபக்கமுக்கோணி எனின், x,y பெறுமதிகளைக்காண்க.

(1, 2, 3, 4 = 10 புள்ளிகள்)

04. சார்பு $y=x^2-4x+1$ இன் வரைபை வரைவதற்காக x, y ஆகியவற்றின் பெறுமானங்கள் இடம் பெறும் பூரணமற்ற அட்டவணை கீழே காட்டப்படுகின்றது.


| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| y | ------ | ------ | -2 | -3 | -2 | 1 | 6 |

a) 1) இவ் அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதிசெய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

b) வழங்கப்பட்டுள்ள வரைபுத்தாளில் x அச்சு வழியேயும், y அச்சு வழியேயும் 10 சிறிய சதுரங்களினால் ஓர் அலகு வகைக்குறிக்கப்படுமாறு அளவிடையை எடுத்து மேற் குறித்த சார்பின் வரைபை வரைக.
வரைபைப் பயன்படுத்தி,
1) வளையியின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.
2) சார்பு $y=x^2-4x+1$ இன் இழிவுப் பெறுமானத்தைக் கணிக்குக.
3) $x^2-4x+1=0$ எனும் சமன்பாட்டின் மூலங்களைக் காண்க.
4) சார்பு மறையாக இருக்கும் x இன் பெறுமான வீச்சை எழுதுக.

(1, 3, 1, 1, 2, 2 = 10 புள்ளிகள்)

05. அருகே உருவில் காட்டியவாறான உருளையின் முனைகளிலிருந்து ஒரே நேர்கோட்டில் அச்சுக்களை உடைய இரு கூம்புகள் சீரான குடைந்து நீக்கப்பட்டுள்ளன.
வெட்டி எடுக்கப்பட்ட மேற்கூம்பின் உயரத்திற்கும், கீழ்க் கூம்பின் உயரத்திற்கு மிடையிலான விகிதம் 1: 2 ஆகவும் உயரம் h ஆரை r ஆகவும் இருப்பின்




1) கூம்புகளின் உயரங்களை h இல் காண்க
2) மேற்கூம்பு , கீழ்க்கூம்பு என்பவற்றின்கனவளவுகளிடையிலான விகிதத்தை எழுதுக.
3) வெட்டி எடுக்கப்பட்ட கூம்புகளின் கனவளவுகளை r, h இல் காண்க .
4) h=6r ஆக இருப்பின் கூம்புகளை குடைந்து நீக்கிய பின்னர் எஞ்சிய பகுதியின் கனவளவை $4\pi r^3$ எனக் காட்டுக.
r = 10.5 cm எனின் எஞ்சிய பகுதியின் கனவளவைக் காண்க.

(1,2,3,4= புள்ளிகள்)

06.a) 1) பல்கோணி ஒன்றின் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை யாது?
2) பல்கோணி ஒன்றின் அகக்கோணங்களின் பெறுமானங்கள் ஒரு கூட்டல் விருத்தியில் அமைந்து காணப்பட்டது. அப்பல்கோணியின் மிகச்சிறிய கோணப்பெறுமதி $120^0$ ஆகவும், பொது வித்தியாசம் $5^0$ ஆகவும் காணப்பட்டது. அப்பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?
b) பெருக்கல் விருத்தியின் 2ஆம் உறுப்பு 10 ஆகும். முதலாம் மூன்றாம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை 25 எனின்,
1) இவ் விருத்தியின் பொது விகிதங்களைக் காண்க.
2) அப்பொது விகிதத்திற்கேற்ப முதல் உறுப்புக்களை காண்க.


(1,4,3,2= 10 புள்ளிகள்)

## பகுதி - B

07. a) ரூபா 300,000 பெறுமதியான ஒவ்செற் இயந்திரமொன்றை முதலில் ரூபா 60,000 ஐ செலுத்தியும் மிகுதியை ரூபா 11,562.50 கொண்ட 24 சம மாதாந்த தவணைக் கட்டணங்களாகச் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம். அவ் வாடகைக் கொள்வனவுத் திட்டத்தில் இயந்திரத்தை வாங்கும் ஒருவர்
1) மீதமாக செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு?
2) வட்டியாக செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு?
3) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
4) வட்டியின்றி ஒரு மாதக்கட்டணம் எவ்வளவு?
5) அறவிட்ட ஆண்டு வட்டி வீதம் யாது?
b) ரூபா 150,000 பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றை இந்தியா விருந்து இலங்கைக்கு கொண்டு வரும் பொழுது 30% சுங்க வரியாக செலுத்தப் படுகிறது எனின், சுங்க வரி செலுத்திய பின் அம் மோட்டார் சைக்கிள் பெறுமதி யாது?

(2,1,2,1,2,2 = 10 புள்ளிகள்)

08. தரப்பட்ட உருவில் O என்பது வட்டத்தின் மையமாகும் AB//CD ஆகுமாறு CD ஆனது O வினூடாக செல்கிறது. $A\hat{D}C=25^0$ எனின் பின்வருவனவற்றைக் காண்க.




1) $D\hat{A}C$ இன் பெறுமானம் யாது?
உமது விடைக்கான காரணத்தை தருக.
2) $B\hat{A}C$ இன் பெறுமானம் யாது?
3) $B\hat{D}C$ இன் பெறுமானம் யாது?
உமது விடைக்கான காரணத்தை தருக.
4) $A\hat{D}B$ இன் பெறுமானம் யாது?
5) $A\hat{E}B$ இன் பெறுமானம் யாது?
உமது விடைக்கான காரணத்தை தருக.
6) $A\hat{O}B$ இன் பெறுமானம் யாது?
உமது விடைக்கான காரணத்தை தருக.

(2,1,2,1,2,2=10 புள்ளிகள்)


09. 1) AB=12cm, $A\hat{B}C=60^0$, $B\hat{A}C=30^0$ ஆகுமாறு முக்கோணி ABC ஐ அமைக்குக.
2) அம்முக்கோணியை கோணம் சார்பாக வகைப்படுத்துக.
3) BC இன் நீளத்தை அளந்தெழுதுக.
4) AC இன் நீளத்தைப்பயன்படுத்தி $\sqrt{108}$ இன் பெறுமானத்தை முதலாம் தசம தானத்திற்கு காண்க.
5) முக்கோணி ABC இன் சுற்று வட்டத்தை வரைந்து அதன் ஆரையை அளந்தெழுதுக.
6) நீர் வரைந்த வட்டத்தின் மையத்தை O எனப் பெயரிடுக. O விலிருந்து BC, AD இற்கு வரையப்பட்ட செங்குத்துக்களை முறையே ox, oy எனக்கொண்டு ox, oy இன் நீளத்தை அளந்தெழுதுக.

(2,1,1,2,2,2=10 புள்ளிகள்)

10. குறித்த பிரதேசத்திலுள்ள மின்சாரத்தை ஊழியர்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளன.
"அவ்வூழியர்களில் 45 பேருக்கு மரங்களை வெட்டுவதற்கு முடியும். 50 பேருக்கு குழிகளைத் தோண்டுவதற்கு முடியும். 57பேருக்கு வயர் இணைப்புக்களை வழங்குவதற்கு முடியும். அத்துடன் 28 பேருக்கு மரங்களை வெட்டவும், குழிகளை தோண்டவும் முடியும். 20 பேருக்கு குழிகளை தோண்டவும் வயர் இணைப்பை வழங்கவும் முடியும். 25 பேருக்கு மரங்களை வெட்டவும் வயர் இணைப்பை வழங்கவும் முடியும். மேலும் 11 பேரால் இம் மூன்று வேலைகளில் மேற்கொள்ள முடியும். 9 பேரால் இவ்வேலைகளின் எதுவையும் மேற்கொள்ள முடியாது ஆகும்."
இவ்விவரத்தின் அடிப்படையில்
1) வென்வரிப்படம் வரைவதன் மூலம் பின்வருவனவற்றைக் காண்க.
2) மரத்தை மட்டும் வெட்டக்கூடிய ஊழியர்கள் எத்தனை பேர்?
3) குழிகளை மட்டும் தோண்டக்கூடிய ஊழியர்கள் எத்தனை பேர்?
4) வயர் இணைப்பை மட்டும் வழங்கக்கூடிய ஊழியர்கள் எத்தனை பேர்?
5) அக் குழுவிலுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை யாது?


(2,2,2,2,2=10 புள்ளிகள்)

11. தரப்பட்ட உருவில் AB// DC//EF ஆகும். அத்துடன் DA //CB, ED//FA ஆகும் அத்துடன் குறிக்கப்பட்டுள்ள தரவுகளைக் கருத்திற்கொண்டு




1) AGED ஓர் இணைகரம் என நிறுவுக.
2) முக்கோணி ADH ≡ முக்கோணி EFG என நிறுவுக.
3) இணைகரம் DEFH = இணைகரம் ABCD இன் பரப்பளவு எனக் காட்டுக.

(3,3,4=10 புள்ளிகள்)

12. 
a) தரப்பட்ட உருவை அவதானித்து,
1) P இலிருந்து Q இன் திசைகோள் யாது?
2) Q இலிருந்து P இன் திசைகோள் யாது?
3) P இலிருந்து R இன் திசைகோள் யாது?

b) கடல் மட்டத்திலிருந்து 100m உயரத்திலிருக்கும் வெளிச்ச வீட்டின் உச்சியில் நிற்கும் மனிதனொருவன் அவ்வெளிச்ச வீட்டை நோக்கி சீரான கதியில் வந்து கொண்டிருக்கும் படகொன்றை முதலில் $32^0$ இறக்கக்கோணத்திலும் 10 செக்கன்களின் பின்னர் $45^0$ இறக்கக்கோணத்திலும் அவதானிக்கின்றான். (மனிதனின் உயரத்தைப் புறக்கணிக்க)
1) 10 செக்கன்களில் அப்படகு நகர்ந்த தூரத்தை கணிக்குக.
2) படகின் கதியை கணிக்குக.

(1,2,2,4,1=10 புள்ளிகள்)

(முற்றும்)


(கணிதம் I - வினாத்தாள் கடந்த 23.10.2008 (வியாழக்கிழமை) உதயனில் பிரசுரமாகியிருந்தது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
30 * 06 * 1975

உதிர்வு
28 * 10 * 2003



## செல்வன் சோதிலிங்கம் திருக்குமார் (திரு)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்பின் உறைவிடமே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
கண்ணீரில் கரைந்தன ஐந்தாண்டுகள்
அன்பு மனங்களில் உன்
இனிய நினைவுகள் அழியாது!

வரும் வழியை விழி பார்த்து ஏங்கி நாம்
இங்கிருந்து அரன் பாதம் தொழுகிறோம்
அவன் நிழலில் உன் ஆத்மா
என்றும் சாந்தி பெற்று
நீங்காது வாழ்ந்திருக்க...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வல்லை வீதி,
சங்கானை. (சி/555663)

நீங்கா நினைவுகளுடன்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரி, மருமகன்.

## சொற்பொழிவு

வடமராட்சி, ஒக்.28

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் இடம்பெறும் கந்தசஷ்டி விரத உற்சவத்தையொட்டி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் விரத நாள்களில் தினந்தோறும் மாலை 6.30 மணிக்கு ஆத்மீகத் தொடர் சொற்பொழிவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாளை புதன்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை "கந்த புராணமும் ஆறுபடை வீடும்" என்னும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேல் தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

(202-236)

## Faculty of Arts, University of Jaffna
## IRQUE Project

**Interview for the selection of Staff Assistant (on contract)**

Interview for the selection of Staff Assistant (on contract) will be held on 30.10.2008 at 9.30 am in the Board room of the University of Jaffna. All the candidates who were invited for the interview which was scheduled for 23.10.2008 are requested to be present for the interview on 30.10.2008 at 9.30 am.

**Director/LTS,**
**IRQUE Project, University of Jaffna,** (C/555680)

# கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி - மீசாலை

## சோமசுந்தரம் கணேசலிங்கம்

(இளைப்பாறிய கொத்தணி அதிபர், கைதடி)




அவர்கள் இறைவனடி சேர்ந்ததை அறிந்து ஆழ்ந்த கவலை அடைகிறோம். அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி. (சி/555669) அம்பிகா டிஸ்பென்சரி.

# 21ஆம் ஆண்டு நினைவு கூரல்

மலர்வு
30 * 12 * 1930



உதிர்வு
28 * 10 * 1987

## அமரர் அ.செ.அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய அரசாங்க எழுதுநர், வனத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

"நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்."

-எபி.13:14

5ஆம் ஒழுங்கை,
மானிப்பாய் வீதி, உடுவில். (79489)

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
28 * 12 * 1947



இறைவன் அடியில்
28 * 09 * 2008

## அமரர் பொன்னையா பரஞ்சோதி (சோதி)

அன்பும் பண்புமாய் வாழ்ந்து எம்மை விட்டகன்ற உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

வீரப்பதிராஜன்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி. (79499)

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
28 * 07 * 1920



மறைவு
28 * 09 * 2008

## அமரர் தம்பு ஐயாத்துரை

இன்று (28.10.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்களா லேன், மல்லாகம். (79497) குடும்பத்தினர்.





இப்போது புதிய சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்துகிறது

'இலங்கையின் அதிசிறந்த நுகர்வோர் சேவைகளை வழங்கும் வங்கி' - ஏசியன் பேங்கர்

சர்வதேசத்தர விருதுபெற்ற வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி, ஆகக்குறைந்த ரூபா 50,000 ஆரம்ப வைப்புக்கு 12.5%* மும் ஆகக்குறைந்த ரூபா 100,000 ஆரம்ப வைப்புக்கு 14%** மும் வருடாந்த வட்டியாக வழங்குகிறது. அத்துடன் நீங்கள்

**எத்தனை தடவைகளேனும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.**

- இலவச இணைய வங்கிச்சேவை
- இலவச SMS வங்கிச்சேவை
- 90% வரை துரித கடன் வசதி
- இலவச ATM அட்டை

அதிசிறந்ததிலிருந்தே அதிசிறந்ததைப் பெறமுடியும்.

கெபிடல் சேமிப்புக் கணக்குகள் பத்தும் விமன சீட்டிழுப்பிற்கு தகுதி பெறாது.
HNB, ஃபிச் ரேட்டிங் லங்காவினால் AA⁻ (lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.

* 12.5% வருடாந்த விளைவு வீதம் 13.24%
** 14% வருடாந்த விளைவு வீதம் 14.93%

HNB CAPITAL SAVINGS
HNB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிலிருந்து இறக்குமதியாகும் முட்டைப்பவுடரிலும் மெலமைன்! அதனைப் பாவிக்க வேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஒக்.28

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பவுடர் வகைகளிலும் 'மெலமைன்' இரசாயனம் சேர்க்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பவுடர் வகைகளையோ இவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்களையோ இலங்கை யில் பாவிக்க வேண்டாம் என்று சுகாதார அமைச்சு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

இந்த முட்டைப் பவுடர் வகைகளிலும் 'மெலமைன்' இரசாயனம் கலந்திருப்பதை ஜப்பானிய நிறுவனம் கண்டுபிடித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் உதவி இயக்குநர் பி.மதரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த முட்டைப் பவுடர் இனிப்புப் பண்டங்கள் பலவற்றிற்குப் பயன்படுத்தப் படுகின்றது என்று அவர் மேலும் சொன்னார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு சோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது என்று மதரசிங்க தெரிவித்த தோடு மக்களையும் இது தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு கேட்டுள்ளார்.

'மெலமைன்' இரசாயனம் கலக்கப்பட்ட 60 உற்பத்திகளைச் சுகாதார அமைச்சு அண்மையில் கண்டுபிடித்திருந்தது. அவற்றுள் 'எட்னா' சொக்லேட் வகைகளும் அடங்குகின்றன. இருப்பினும் சோதனை நடவடிக்கைகள் இன்னும் தொடருகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# கருத்தோவியப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஒக்.28

கருத்தோவியப் போட்டிக்கு யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை வலயப் பணிமனை கோரியுள்ளது.

ஆக்கங்க்ள் நாளை 29ஆம் திகதிக்கு முன்பதாக வலயப் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென யாழ்.வலய பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

5 பிரிவுகளில் நடைபெறவுள்ள போட்டியில் ஒரு பிரிவில் இருந்து மூன்று ஆக்கங்களை பாடசாலை அதிபர்கள் தெரிவு செய்து அனுப்ப வேண்டும்.

மாணவர்கள் 18"x12"அளவுள்ள வரைதல் தாளில் விரும்பிய வகை வர்ணங்களைப் பாவித்து வரைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. கோட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று ஆக்கங்களுக்குப் பெறுமதியான பரிசில் வழங்கப்படவுள்ளது.

பிரிவு, தர ரீதியாக பின்வரும் தலைப்புகளில் ஓவியங்கள் அமைய வேண்டும்.

பிரிவுI(தரம் 4-5) "நான் விரும்பும் பாடசாலை", பிரிவுII(தரம் 6-7) "பள்ளிக்கு செல்லவே ஆசை", பிரிவுIII (தரம் 8-9) "என்னைச் செயற்பட விடுங்கள்", பிரிவு IV(தரம் 10-11) "தரமான பாடசாலையும் சமூகமும்", பிரிவுV(தரம் 12-13) "சிறுவர் உரிமைகளை மதிப்போம்."

(202-302)

# நல்லூர் பிரதேசத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

நல்லூர், ஒக்.28

நல்லூர் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து மறுமலர்ச்சி சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ளனர்.

கிராமங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கும் பொருட்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் பொருளாதாரம், கலை கலாசாரம், கைத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்பம், சிறுவர்நலன், சமுதாய மேம்பாடு, மனிதவள அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் போன்ற சமுதாயத்தில் காணக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனின் ஆலோசனையுடன் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

(202-111)

# சிறுவர்கள் சமூகத்துடன் ஒன்றி வாழக்கூடிய ஆற்றலைப் பெரியவர்கள் வளர்க்க வேண்டும்

## —யாழ்.அரச அதிபர் கருத்து—

நல்லூர், ஒக்.28

சிறுவர்கள் சமூகத்துடன் ஒன்றித்துப் போகக் கூடியவர்களாகவும் சமூகத்தை



உயர்நிலைக்கு இட்டுச் செல்பவர்களாகவும் வாழவேண்டும். இதற்கு வேண் டிய ஆற்றலை உருவாக்கும் வகையில் பெரியவர்கள் சிறுவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கருத்துத் தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச செயலக சிறுவர்கள் இணைந்து 'எமது தினம்' என்னும் நிகழ்வை அண்மையில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மண்டபத்தில் நடத்தினர்.

பிரதேச செயலக சிறுவர் சபைத் தலைவி செல்வி சே.சசிக்கா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்பெல்லாம் சிறுவர்களும் பெரியவர்களும் அன்பாகக் காணப்பட்டனர். காலமாற்றத்தால் இன்று அதை ஞாபகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

சிறுவர்களுக்குத் தலைமைத்துவம் உட்பட பல்வேறு துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்கு கல்வியின் நோக்கம் குறித்த அடிப்படைத் தன்மைகளை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கல்வியின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணர்த்தவேண்டியது பெரியவர்களின் - குறிப்பாக பெற்றோர், ஆசிரியர்களின் கடமையாகும்.

சிறுவர்களிடையே தொடர்பாடல் உலகமயமாக்கல் குறித்த அறிவு வளப்படுத்தப்பட வேண்டும். சமூகத்தை உயர்நிலைக்கு இட்டுச்செல்லக் கூடியதான ஆற்றலை உருவாக்கும் வகையில் சிறுவர்களுடனான எமது செயற்பாடுகள் அமைய வேண்டும்.

சிறுவர்களின் வாழ்வு, அவர்களின் தேவை, அவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டம் என்பன குறித்து அரச மட்டத்திலும் கவனிக்கப்படுகின்றது. அதனால் தான் மாவட்ட செயலக மட்டத்தில் சிறுவர் பாதுகாப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சிறுவர்கள் எந்தவகையில் வாழ வேண்டுமோ அப்படி வாழப் பழக வேண்டும் எனத் திட்டமிட்டு அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கிறது - என்றார்.

(202-111)



நல்லூர்ப் பிரதேச செயலக சிறுவர் சபையின் 'எமது தினம்' நிகழ்வில், தலைவர் செல்வி கே.சசிக்கா உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.
யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கான பரிசில்கள் வழங்குவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம்.
சிறுவர்களின் கலை நிகழ்வொன்றை இறுதிப் படத்தில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

# சிவனும் சக்தியும் ஒன்றே என்பது கேதார கௌரி விரதம் உணர்த்தும் தத்துவம்



இன்று கேதார கௌரி விரத பூர்த்தி தினமாகும்.

எமக்கு சகல நலன்களையும் தந்து கொண்டிருக்கின்ற இறைவனை எப்பொழுதும் எண்ணித் துதித்தல் உயிரினத்தின் கடமையாகும். பகுத்தறிவற்ற பிற உயிரினங்களுக்கு அது இயலாததாயினும், பகுத்தறிவு படைத்த மனித இனத்திற்கு அஃது இன்றியமையாதது. எனினும், உலகியல் சூழல்களால் அதனைத் தினமும் இயற்ற இயலாத நிலையில் இருப்பதால் குறிப்பிட்ட சில நாட்களேனும் மக்கள் அக்கடப்பாட்டில் நிற்றல் சிறந்தது. அந்த நாள்களே விரத நாள்களாகும். விரதம் - தவம் - நோன்பு என்பன ஒரே கருத்தை வெளிப்படுத்தி நிற்பவை.

விரதம் என்பது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிப டுதல் எனப் பொருள்படும்.

இஃது ஆன்ம ஈடேற்றங்கருதிச் செய்யுஞ் சாதனை ஆகும். பெரியோர் கூறும் புண்ணியம் ஏழுனுள் ஒன்று விரதம் அநுட்டித்தலாகும். விரதம் அநுட்டிப்பதனால், மனம், புத்தி முதலியன தெளிவும் தூய்மையும் அடையும். இதனால் ஞானம் - நல்லறிவு கைகூடும்.

கேதாரேசுவரான சிவபெருமானைக் குறித்து பிராட்டியார் விரதம் அனுஷ்டித்ததால் இந்த விரதத்திற்கு கேதார கௌரி விரதம் என்று பெயர் ஏற்பட்டது.

சிவனும் சக்தியும் ஒன்றென்ற தத்துவத்தை உணர்த்தும் ஓர் ஒப்பற்ற விரதம் தான் இக்கௌரி விரதம் எனலாம்.

இது,புரட்டாதி மாதம் சுக்ல பக்ஷம் தசமியன்று தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண பக்ஷம் தீபாவளி அமாவாசை வரை விரதமிருந்து முடிக்க வேண்டிய நோன்பாகும்.

பிருங்கி முனிவர் என்பவர் பெரும் சிவபக்தர். இவர் சிவனைத் தவிர வேறு எத்தெய்

## இன்று கேதார கௌரி விரதம்

வத்தையும் சிந்தையிற் கொண்டாரில்லை. இவர் சக்தியைக் கூடத் தொழத்தவறினார். அவரது இச் செயலைக் கண்டு சங்கரி சினங்கொண்டாள். அம்பிகையின் கோபாக்கினிக்குப் பலியான முனிவர், கால்களில் சக்தியை இழந்தார்.

தாம் வேறு சிவன் வேறு அல்ல. சிவ னும் சக்தியும் ஒன்றே என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்த அம்பிகை விரும்பினாள்.

கயிலையை விட்டகன்று கௌதம முனிவருடைய தபோவனத்தை அடைந்த கௌரி தேவியை கௌதமர் வணங்கி வரவேற்றார். கௌதம முனிவரிடம் கௌரி பிருங்கி முனிவரால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பற்றிக் கூறினாள்.

கௌதம முனிவர் கௌரி தேவியை விரதம் ஒன்றை அனுஷ்டிக்குமாறு வேண்டிக் கொண்டதுடன், அந்த விரத மகிமையால் தேவியின் எண்ணம் ஈடேறும் என்றும் கூறினார். அத்தோடு விரத அனுஷ்டான விதிமுறைகளையும் விளக்கிச் சொன்னார்.

கௌதம முனிவர் சொற்படி கௌரி, விரதத்தை அனுஷ்டிக்கத் தொடங்கினாள். விரதம் பூர்த்தியான நாளன்று-வேத முதல்வன் சிவபெருமான் கௌரியின் முன்னால் காட்சி அளித்தார்.

கௌரிதேவி மேற்கொண்ட விரதத்தின் மகிமையால் கௌரியின் விருப்பம் போல் தனது உடம்பின் இடப் பாகத்தைத் தேவிக்குத் தந்தார் ஈசன். அதுவே அர்த்த நாரீசுவரர் என்னும் சிவசக்தி சொரூபத்தின் அருள் வடிவான திருத்தோற்றம்.

இவ் விரதத்தை ஆரம்பிக்கும்போது முதலில் பூரண பொற்கும்பம், கலசம் வைத்து எம்பெருமானை ஆவாஹனம் செய்தல் வேண்டும். பின்னர் இருபத்தொரு இழையுடைய நூலை ஒன்றாக முறுக்கிக் கொள்ள வேண்டும். தினமும் பூரணகும்ப பூசையின்போது, நூலில் முடிச்சு ஒன்று போட வேண்டும். இவ்வாறு இருபத்தொரு நாள் பூசை செய்து இருபத்தொரு முடிச்சுகளையும் போட வேண்டும். இருபத்தொராவது நாள் தீபாவளி தினமாக அமையும். அன்றைய தினம் இருபத்தொராவது முடிபோட்டு நூலைக் காப்பாகக் கட்டி விரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

இருபத்தொரு நாள்கள் விரதத்தை அனுஷ்டிக்க இயலாதவர்கள் இறுதி நாளன்று மட்டும் இவ்விரதத்தை மேற்கொள்ளலாம். இருபத்தொரு பழங்கள்- பக்ஷணங்கள் செய்து எம் பெருமானுக்கு நிவேதித்து, வில்வத்தால் அர்ச்சித்து , தூப தீபங்களால் ஆராதித்து, இருபத்தொருபேருக்கு அமுதளித்து இந்த விரதத்தைப் பூர்த்திசெய்துகொள்ளலாம்.

இவ்விரத வரலாறுகளைப் பற்றிய விளக்கங்களைச் சொல்லும் பல புராணக் கதைகள் உள்ளன. இவ்விரதத்தை ஆண்டு தோறும் அனுஷ்டிப்பதால் கணவன் மனைவி இருவரிடையே ஒற்றுமையும் குதுகலமும் நிலவுவதுடன் சகல நன்மைகளும் கிட்டும்.

கரம்பொன் ம.வித்தியாதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசுக்கு எந்தச் சிக்கலையும் உருவாக்க மாட்டோம்!

## முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு



சென்னை, ஒக்.28

ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசுக்கு எந்த விதத்திலும் சிக்கலை உருவாக்க மாட்டோம் என்றும் - புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்குவது குறித்தும், பஸில் ராஜபக்ஷவின் முரண்பட்ட கருத்துகள் குறித்தும் மத்திய அரசுதான் சிந்தித்து முடிவு எடுக்கவேண்டும் என்றும் முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினை குறித்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் சந்திப்பிற்குப் பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இதனைக் கூறினார்.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு -

கே- பிரணாப் முகர்ஜியுடன் நடத்திய பேச்சு திருப்தியாக இருக்கிறதா?

ப:- இதிலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களெல்லாம் முடிவடைந்தால்தான் முழுத் திருப்தி அடைய முடியும் என்று நம்புகிறேன்.

கே:- போர் நிறுத்தம் உண்டா?

ப:- கிட்டத்தட்ட அவர் சொல்கின்ற மாதிரி 40 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறுகின்ற ஒரு போராட்டம் இது. இது நான்கு நாட்களில் முடியாது. நாம் போர் நிறுத்தம் வேண்டும் என்று சொன்னது, பொது மக்களை இன்னல்களிலிருந்து காப்பாற்றுவதற்காகத்தான். இப்பொழுது இலங்கை அரசு, தாங்கள் பொதுமக்களை நிச்சயமாக தாக்கமாட்டோம் என்ற உறுதிமொழியை அளித்திருக்கிறது. போர் நிறுத்தத்திற்கு உடனே அமர்ந்து பேசவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை இந்தியாவே முன்னின்று நடத்துகிறதா? அல்லது வேறு நாடுகளின் முயற்சியால் நடைபெறுகிறதா? அல்லது வேறு ஏதாவது ஒரு அமைப்பின் மூலம் நடைபெறுவதா? என்பது பற்றி இன்னும் தீர்க்கமான முடிவுக்கு வரவில்லை. இருந்தாலும் போர் நிறுத்தத்திற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டு, அவைகள் மேற்கொள்ளப்படுவதற்குத் தடை எதுவும் இப்பொழுது இல்லை.

கே:- எம்.பி.க்கள் ராஜினாமா பற்றி...

ப:- அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இப்பொழுது அந்த முடிவை நிறைவேற்றினால், இந்தியாவிலே அரசியல் நிலைமை பல சிக்கல்களுக்கு ஆளாகும். ஆகவே அந்த முடிவை ஒத்திவையுங்கள் என்று பிரணாப் முகர்ஜி கேட்டுக்கொண்டிருக்கிறார்,

கே:- பிரணாப் முகர்ஜி பேசும்போது, நான் முதல்வரிடம் பேசினேன். அவர் மத்திய அரசுக்கு

**இந்தியச் செய்திகள்**

எந்த நெருக்கடியும் தரமாட்டேன் என்று உறுதிமொழி அளித்திருக்கிறார் எனச் சொல்லியிருக்கிறாரே?

ப:- மத்திய அரசுக்குச் சிக்கல் உருவாக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். நிச்சயமாக உருவாக்க மாட்டேன் என்று சொன்னேன்.

கே:- விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று பிரபாகரன் ஒரு அறிக்கை விட்டிருக்கிறாரே, அது பற்றி தங்கள் கருத்து என்ன?

ப:- அதற்கு இந்திய அரசுதான் கருத்துத் தெரிவிக்க வேண்டும். நான் எப்படி கருத்துச் சொல்ல முடியும்!

கே:- இலங்கையின் தூதுக்குழு சார்பாக பஸில் ராஜபக்ஷ கூறிய கருத்துகள் அனைத்தையும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா? எதிர்த்தரப்பான இலங்கைத் தமிழ் அமைப்புகளும், இலங்கைத் தமிழ் எம்.பிக்களும் அதனை முழுமையாக மத்திய அரசு நம்பக்கூடாது. எங்கள் தரப்பின் கருத்தையும் கேட்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே?

ப:- இன்றைக்குத்தான் வந்து சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார். அதை நம்முடைய மத்திய அரசு சிந்தித்து முடிவெடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

கே:- எம்.பிக்கள் ராஜினாமாவிற்கு 28ஆம் திகதி கெடுக் கொடுத்திருந்தீர்களே, தற்போது பேச்சு நடைபெற்று வரும் நிலையில் அது தேவையில்லை என்று கருதுகிறீர்களா?

ப:- இன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சியை நம்முடைய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி விளக்கியிருக்கிறார். அதிலிருந்து புரிந்து கொள்ளுங்கள். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அப்போது எடுத்த முடிவில் அந்தக் கட்சிகளுக்கிடையே மாறுபட்ட கருத்துகள் இருப்பதால் அவர்களுடனும் கலந்தாலோசித்துத்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

# தி.மு.க. - காங். கூட்டணியில் சிக்கலோ, மோதலோ இல்லை

## தங்கபாலு பேட்டி



சென்னை, ஒக். 28

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி உறவில் சிக்கலோ, மோதலோ இல்லை - என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சத்தியமூர்த்திபவனில் செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே அவர் அதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினை தீர மத்திய அரசு தனது கடமையைத் தொடர்ந்து செய்து வருகிறது. தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி உறவில் சிக்கலோ, மோதலோ இல்லை. தமிழகத்தில் பலர் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசி வருகின்றனர். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்திய இறையாண்மையை குலைக்க யார் முயற்சித்தாலும் சட்டம் தனது கடமையைச் செய்யும்.

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் ராஜிநாமா செய்யும் அவசியம் ஏற்படாது. அப்பிரச்சினையில் அரசியல் தீர்வு காண மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ் மக்களுக்காகப் போராடி உயிரிழந்த ராஜீவின் சிலையை உடைப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. பொலிஸார் முன்னுக்குப் பின் முரணாகத் தகவல் கொடுக்கின்றனர். அங்கு காங்கிரஸ் கட்சி சார்பில் வேறு சிலை வைக்கப்படும்'' - என்றார்.

# ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பரிகாரமாக 35 லட்சம் ஈழத்தமிழரையும் பலி கொடுப்பதா?

## மீள்பரிசீலிக்கக் கோருகிறார் சரத்குமார்



சென்னை, ஒக்.28

"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை என்பது விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அதற்குப் பரிகாரமாக 35 லட்சம் இலங்கைத் தமிழர்களைப் பலி கொடுத்துத்தான் ஆக வேண்டுமா என்பதை காங்கிரஸ் கட்சியினர் மீள்பரிசீலிக்க வேண்டும்.''

- இவ்வாறு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரும், நடிகருமான சரத்குமார் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சீமான், அமீர் இருவரையும் அரசு விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இதுகுறித்து கடந்த சனிக்கிழமை அவர் கூறியவை வருமாறு-

முதல்வர் கருணாநிதி - பிரணாப் முகர்ஜி சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்ட கருத்தின் படி, நோர்வேத் தூதுக்குழு மீண்டும் பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு இலங்கை அரசு உடனடியாக இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும்.

நோர்வேத் தூதுக்குழுவில் தமிழகத் தலைவர்களும் இடம்பெறவேண்டும்' என்றார்.

# ஈழத்தமிழருக்காகப் போராடும் அண்ணன் அ.தி.மு.க. கூட்டிலிருந்து விலகவேண்டும்

## திருமாவளவன் வேண்டுகோள்

''ஈழத் தமிழர்களுக்காக எந்நேரமும் போராடும் அண்ணன் வைகோ, இப்போதாவது அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து வெளியேறி ஜெயலலிதாவைத் தனிமைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால், அது ஈழத் தமிழர்களுக்கு அவர் செய்யும் மிகப் பெரிய உதவி!''

- இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நான் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய போது கைதுசெய்யாத அப்போதைய முதல்வரான ஜெயலலிதா தற்போது மட்டும் என்னைக் கைது செய்ய வலியுறுத்துவது ஏன்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் இதுகுறித்து தமிழகத்திலிருந்து வாரமிருமுறை வெளிவரும் ஜுனியர் விகடன் இதழுக்கு வழங்கிய பேட்டியில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு-

என்னை ஏன் கைது செய்யவில்லை என்று



கேட்கும் ஜெயலலிதாவிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். "நீங்கள் முதல்வராக அமர்ந்திருந்த போதுதான் நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஒரு மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, எட்டு நாள்கள் அங்கேயே தங்கியிருந்து விட்டு வந்தேன். திரும்பவும் 'பொடா' சட்டம் நடைமுறையில் இருந்த போதும், வெளிப்படையாக அமைந்த அந்தப் பயணத்துக்காக அப்போது ஏன் ஜெயலலிதா என்னைக் கைது செய்யவில்லை?''

''ஈழத் தமிழர்களின் ஒப்பாரியிலும் அரசியல் நடத்தும் பெண் தலைவருக்குத் தாயுள்ளம் துளியும் இல்லை! எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அ.தி.மு.கவை மக்கள் விரோதக் கட்சியாக நடத்தி, அதற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார் - என்றார்.

# இலங்கைக்கு போர்த் தளபாடங்களை இந்திய அரசு கொடுத்து உதவவில்லை

## அமைச்சர் ப.சிதம்பரம் பேட்டி

ஈழத் தமிழரை அரக்கத்தனமாகப் படுகொலை செய்துவரும் இலங்கைக்கு இந்திய அரசு இராணுவத் தளபாடங்கள் எதனையும் கொடுக்கவில்லை - என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் மறுத்துள்ளார்.

காரைக்குடியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கை பிரச்சினையைப் பொறுத்தவரை ஒன்றுபட்ட இலங்கையில் சிங்கள மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து உரிமைகளும், வாய்ப்புகளும் தமிழர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் இந்திய அரசின் கொள்கை. இதற்காக ராஜீவ் காந்தி காலத்தில் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து உடன்பாடுகூட ஏற்பட்டது. ஆனால் புலிகள் இதற்கு ஒத்துழைப்புத் தரவில்லை. மாறாகப் போர் மூலம் வெற்றிபெற முடியும் என நம்பினர்.

இது தவறான நம்பிக்கை என நாங்கள் அவர்களுக்குப் பலமுறை அறிவுரை கொடுத்திருக்கிறோம். நானே பலமுறை பிரபாகரனைச் சந்தித்து இந்த வழி சரியான வழியல்ல. ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே தமிழர்களுக்கு கிழக்கு, வடக்குப் பகுதிகளில் ஒன்று அல்லது இரண்டு மாநிலங்கள் என பேச்சு மூலம் முடிவு செய்ய முடியும்.

எனவே, பேச்சுக்குச் செல்லுங்கள் என்று பலமுறை அறிவுறுத்தி உள்ளேன். ஆனால் புலிகள் தாங்கள் எடுத்துக்கொண்ட பாதையில் இருந்து விலகி அமைதிப் பாதைக்கு வருவதாகத் தெரியவில்லை. இதன் காரணமாகவே இலங்கையில் போர் ஏற்பட்டது.

இந்தப் போரிலே இலங்கை அரசு இராணுவ ரீதியாகத் தீர்வு காண முயற்சிப்பதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். பேச்சு மூலமாகவே தீர்வு காண வேண்டும். இதனையும் பலமுறை வலியுறுத்தி உள்ளோம். போரினால் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் அந்த நாட்டுக்குள்ளே அகதிகளாக உள்ளனர். அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படவேண்டும் என்றும், போர் நிறுத்தப்படவேண்டும் என்றும், பேச்சுக்கு இருதரப்பும் வரவேண்டும் என்றும் இந்திய அரசு வலியுறுத்தி வருகிறது.

இலங்கை அரசுக்கு இந்திய அரசு எவ்வித போர்த் தளபாட உதவிகளையும் செய்யவில்லை. இது தவறான பிரசாரம். காங்கிரஸ், தி.மு.க. உடன்பாடு என்பது காங்கிரஸ் தலைவர் சோனியா, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரின் பேச்சால் ஏற்பட்டது. அந்த உடன்பாடு வலுவானதாகவே இருக்கிறது - என்றார்.

# சீமான், அமீர் விடுவிக்கப்படும் தினம்தான் எங்களுக்கு தீபாவளி என்கிறார் பாரதிராஜா

சென்னை, ஒக்.28

''ஈழத் தமிழர்கள் படும் அவலத்தைக் கண்டு புயலெனப் பொங்கியெழுந்து குரல் கொடுத்தமைக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் விடுவிக்கப்படும் நாள்தான் எங்களுக்குத் தீபாவளி.''

உங்கள் விடுதலைக்காக சிறைவாசலில் வெடிகளோடு காத்திருப்போம். அங்குதான் வெடிவெடித்து, வான வேடிக்கையோடு தீபாவளி கொண்டாடுவோம். ஈழத் தமிழர்களின் துயர் கண்டு - சிறார் முதல் பெரியவர் வரை கொல்லப்படும் கொடுமை கண்டு - உணவுக்காக, உயிர் காக்கும் மருந்துக்காக, வாழ்வுக்காக அவர்கள் படும் அவலம் கண்டு - எழுந்த துயரத்தில், கோபத்தில், உணர்ச்சி வேகத்தில் உதிர்க்கப்பட்ட வார்த்தைகளுக்குத் தவறான அர்த்தம் கற்பிக்க வேண்டாம்.

- இவ்வாறு திரைப்பட இயக்குநர் பாரதிராஜா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

''ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் தமிழர்களுக்குப் பிரச்சினை ஏற்பட்ட பொழுதெல்லாம் குரல் கொடுக்கத் தமிழ்த் திரையுலகம் என்றுமே தயங்கியதில்லை. இதற்குக் கர்நாடகாவில் காவிரிப்பிரச்சினை ஏற்பட்ட போது நெய்வேலி வரை சென்று போராடியது, கும்பகோணத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் குழந்தைகள் இறந்த போது அனுதாபத்தோடு உதவிகள் செய்தமை போன்ற பல நிகழ்ச்சிகள் இன்று வரை அழிக்க முடியாத உதாரணங்களாக இருக்கின்றன.

கடந்த 18ஆம் திகதி இராமேஸ்வரம் வரை சென்று தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த திரையுலகத் தமிழ் உணர்வுக்குழுவின் சார்பில் சென்ற தமிழ்த் திரையுலகினர் அனைவரின் நோக்கமும் தமிழர்கள் இலங்கையில் தாக்கப்படுவதைத் தடுப்பதுதான். அதைத் [illegible] போன்ற எந்த உள்நோக்கமும் இந்தக் குழுவிற்கோ அல்லது இந்தக் குழுவின் சார்பில் இராமேஸ்வரம் சென்ற 2 ஆயிரம் திரையுலக சகோதரர்களுக்கோ



இல்லை என்பதை முதலில் தெரிவித்து கொள்ள விரும்புகிறோம்.

எங்கள் சகோதரர்களான சீமான், அமீர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளமையால் நாங்கள் துயரம் அடைந்துள்ளோம். அதுவும் தீபாவளியன்று அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது ஆற்றொணாத் துயரைத் தருகிறது. சகோதரர்களே, சிறையில் நீங்கள் அடைக்கப்பட்டிருக்கும் இந்தத் தீபாவளி எங்களுக்கு ஒரு துயரத் தீபாவளி. நீங்கள் எப்போது விடுவிக்கப்படுகிறீர்களோ அப்போதுதான் எங்களுக்குத் தீபாவளி.

பெங்களூரில் இறையாண்மை எங்கே? காவிரி நீரில் இறையாண்மை எங்கே? முல்லை பெரியாரில் இறையாண்மை எங்கே? பாலாற்றில் இறையாண்மை எங்கே? என்றெல்லாம் கேள்வி கேட்க விரும்பவில்லை. எல்லோருக்கும் இந்திய இறையாண்மை, ஒருமைப்பாடு மீது எவ்வளவு அக்கறை உள்ளதோ அவ்வளவு அக்கறை எங்களுக்கு உண்டு.

தமிழகத்துக்கும், தமிழர்களுக்கும் எப்போதெல்லாம் துன்பங்களும், துயரங்களும் நிகழ்கின்றதோ, எப்பொழுதெல்லாம் உரிமைகள் மறுக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் ஒன்றுபட்ட தமிழ்த் திரையுலகம் உரத்த குரல் எழுப்பி வருகிறது என்பதை தமிழ் நெஞ்சங்களுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்பது அவசியமில்லை.

எங்கள் பெயரால் ஆதரித்தும், எதிர்த்தும் கொடும்பாவிகள் எரிக்கப்படுவது எங்களுக்கு வேதனையைத் தருகிறது. இரண்டையுமே தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். ஒட்டுமொத்த தமிழர்களாலும் தமிழ்த் திரையுலகம் வரவேற்கப்பட வேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும்.'' - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். துணைப்படைகளுக்கு அமெரிக்க இராணுவம் பயிற்சி

இஸ்லாமாபாத்,ஒக்.28

பாகிஸ்தானின் எல்லைப் பிராந்தியங்களுக்குள் ஊடுருவியுள்ள தலிபான் தீவிரவாதிகளையும், அல்- குவைதா தீவிரவாதிகளையும் எதிர்த்துப் போரிடுவதற்கு, பாகிஸ்தான் துணைப்படைகளுக்கு அமெரிக்க இராணுவம் பயிற்சியளித்து வருகிறது.

அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த 36 பேர், பாகிஸ்தான் துணைப்படையினருக்கு இம்மாதம் முதல் இப்பயிற்சியை அளித்து வருகின்றனர். எனினும் இது குறித்து பாகிஸ்தான் அரசு, வெளிப்படையாகவோ, அதிகார பூர்வமாகவோ இதுவரை அறிவிக்கவில்லை.

இது தொடர்பாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், பயிற்சியளிப்பதற்காக, பாகிஸ்தான் வந்துள்ள அமெரிக்க இராணுவத்தினர், இதர இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என்றார்.

''இப்பயிற்சி இதுவரை யாருக்கும் அறிவிக்கப்படாத இரகசிய இடத்தில் இடம் பெற்று வருகிறது. எல்லைப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள துணைப்படை மூத்த அதிகாரிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. பயிற்சி முடிவடைந்ததும் இந்த அதிகாரிகள் தங்களின் கீழ் உள்ள வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

அதே வேளை, பயிற்சி அளிப்பதற்காக, மேலும் அமெரிக்க இராணுவத்தினரை பாகிஸ்தானுக்கு வரவழைக்கும் திட்ட மேதும் கிடையாது. பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியங்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள அந்நிய தீவிரவாதிகள் முற்றாக அகற்றப்பட்டு விடுவார்கள் என்றும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியத்திலுள்ள லோய் சாம் கிராமத்தை பாகிஸ்தான் இராணுவம் தலிபான், அல்- குவைதா தீவிரவாதிகளிடமிருந்து மீட்டு விட்டது. பதுங்கியிருந்த அநேக தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மோதலில் ஈடுபட்ட பலர் கொல்லப்பட்டனர் என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

ஏறத்தாழ இரண்டு இலட்சம் அப்பாவி கிராமவாசிகளை மிரட்டியும், அடித்தும் இத்தீவிரவாதிகள் வெளியேற்றியுள்ளார்கள். பின்னர் கிராமத்தைக் கைப்பற்றி, பயிற்சி முகாம்களையும், பதுங்கு குழிகளையும் அமைத்திருக்கிறார்கள். தற்போது இக் கிராமம் பாகிஸ்தான் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அது விவரித்தது.


## லொத்தர் சீட்டில் ஒபாமா

நியூயோர்க், ஒக்.28

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெல்லக்கூடியவராக கருதப்படும் பராக் ஒபாமாவுக்கு கொலம்பியாவிலும் நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது.

கொலம்பியாவில் ஒபாமாவுக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், அந்நாட்டிலுள்ள புகழ் பெற்ற லொத்தர் நிறுவனம் ஒன்று ஒபாமா படத்தை அச்சிட்டு லொத்தர் சீட்டுகளை வெளியிட்டுள்ளது.

அந்நாட்டு மக்கள் பலர் ஒபாமா மீது அபிமானம் கொண்டிருப்பதால் அவர் படத்தை லொத்தர் சீட்டு நிறுவனம் அச்சிட்டுள்ளது. கொலம்பியர்கள் கருத்துப்படி அமெரிக்கத் தேர்தலில் ஒபாமாவே வெற்றி பெற்று அடுத்த ஜனாதிபதி ஆவாராம்.



ஜேர்மனியின் பெர்லின் நகர சர்க்கஸ் குழுவில் இந்த நாயும், வெள்ளைப் புலியும் இடம்பெற்றுள்ளன. நாயின் பெயர் ஜேக். வெள்ளைப் புலியின் பெயர் பம்பாய். இந்த இரண்டையும் ஒரேகூண்டில் அடைத்து வைத்துள்ளனர். நாயும், புலியும் நல்ல நண்பர்களாகி விட்டன. இவற்றிற்கிடையே சண்டை வந்ததில்லை. எப்போதும் ஒரே விளையாட்டுத்தான்.

## அமெ. ஏவுகணைத் தாக்குதலில் தலிபான் கொமாண்டர் பலி!

இஸ்லாமாபாத்,ஒக்.28

வட-மேற்கு பாகிஸ்தானில் அமெரிக்க இராணுவ விமானம் ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில், உயர் மட்டத் தலிபான் கொமாண்டர் மொஹமத் ஒமர் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர் என நேரில் கண்டவர்களும் அதிகாரிகளும் தெரிவித்தார்கள்.

தென் வசிரிஸ்தானிலுள்ள தலிபான் கொமாண்டர் மொஹமத் ஒமரின் இல்லத்தை இலக்கு வைத்து, ஆளில்லாத அமெரிக்க விமானம் இந்த ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. இதில் பலியானவர்களில் ஒமரும் ஒருவர் என அதிகாரிகள் விவரித்தார்கள்.

தென் வசிரிஸ்தானிலுள்ள மண்டட்டா கிராமத்தில் இந்த இல்லம் அமைந்துள்ளது. ஏவுகணைத்தாக்குதலில் இந்த வீடு முற்றாக நிர்மூலமாக்கப்பட்டு விட்டது. இதனை அடுத்துள்ள மற்றுமிரு வீடுகளும் சேதமடைந்தன என உள்ளூர் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

கொல்லப்பட்ட மொஹமத் ஒமர், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்க வான்வழித்தாக்குதலில் கொல்லப்பட்ட பிறிதொரு தலிபான் கொமாண்டரான நெக் மொஹமதின் நெருங்கிய நண்பராக இருந்தவர்.

ஏவுகணைத் தாக்குதலில் மொஹமத் ஒமரின் வீடும், அதனோடு இணைந்த மண்டபமும் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. இடிபாடுகளுக்குள்ளிருந்து இருபது பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. இத்தாக்குதலில் மற்றும் ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

## மூன்று நாடுகளில் பூகம்பம்

அமெரிக்கா, இந்தோனேஷியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில், ஞாயிற்றுக் கிழமை பூகம்பங்கள் ஏற்பட்டன. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள பெட்ரோலிஸா நகரை பூகம்பம் உலுக்கியது. கட்டடங்கள் குலுங்கின. எனினும் உயிர்ச் சேதமோ, பொருள்சேதமோ ஏற்படவில்லை.

இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.1 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. இது பூமிக்கடியில் 17 கிலோ மீற்றர் ஆழத்தில் மையங் கொண்டிருந்தது என அமெரிக்க தேசிய நிலநடுக்கப்பவியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

ஒரு நிமிட இடைவெளிக்குப்பின்னர் அமெரிக்காவின் போர்ட் ராஸ் என்னுமிடத்தை பூகம்பம் உலுக்கியது. இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 4.1 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இது பூமிக்கடியில் 5 கிலோ மீற்றர் ஆழத்தில் மையங்கொண்டிருந்தது என்றும் இந்த ஆய்வு மையம் குறிப்பிட்டது.

இந்தோனேஷியாவின் சுலாவேசி தீவை பூகம்பம் உலுக்கியது. இது கோரோண்டாலோ நகருக்கு அருகில், நிலத்துக்கடியில் 32 கிலோ மீற்றர் ஆழத்தில் மையங் கொண்டிருந்தது. எனினும் சேத விபரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

ஆப்கானிஸ்தானின் வடகிழக்குப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில், பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.6 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது. பதாக்ஷான் மாநிலத்திலுள்ள பைசாபாத் நகருக்கருகில் பூமிக்கடியில் 208 கிலோ மீற்றர் ஆழத்தில் இது மையங் கொண்டிருந்தது.

இப்பூகம்பத்தின் தாக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை. மலைப்பாங்கான ஆப்கானிஸ்தானில் அடிக்கடி பூகம்பம் ஏற்படுவது வழக்கமாகும். 2002 ஆம் ஆண்டு, இந்துக் குஷ் மலைப்பிராந்தியத்தில் ஏற்பட்ட பூகம்பத்துக்கு 1,500 பேர் பலியாகியுள்ளனர்.

## மியன்மார் ஜனநாயக கட்சியின் பிரமுகர்கள் 6 பேருக்குச் சிறை

யாங்கூன்,ஒக்.28


மியான்மாரில் ஜனநாயகத்துக்காகப் போராடி வரும் ஜனநாயக தேசிய லீக் கட்சியைச் சேர்ந்த 6 பேருக்கு 2 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இராணுவ ஆட்சிக்கு எதிராக கடந்த ஆண்டு நடந்த போராட்டத்துக்காக அக்கட்சியைச் சேர்ந்த இருவருக்கு 12 ஆண்டுகளும், ஒருவருக்கு 13 ஆண்டுகளும், ஒருவருக்கு 11 ஆண்டுகளும், ஒருவருக்கு8 ஆண்டுகளும், ஒருவருக்கு 2 ஆண்டுகளும் தண்டனை விதித்து மாண்டலே நகர நீதிமன்றம் உத்தரவிட்டது.

எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதையடுத்து மியன்மாரில் கடந்த வருட ஓகஸ்டில் போராட்டம் தொடங்கியது. திடீரென இலட்சக்கணக்கானோர் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினர். இதற்குப் புத்த பிக்குகள் தலைமை வகித்தனர்.

1988- க்குப் பின்னர் ஏற்பட்ட மிகப் பெரியமக்கள் எழுச்சியாக இது கருதப்படுகிறது. இதையடுத்து செப்ரெம்பர் 26 இல் இராணுவ அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 31 பேர் கொல்லப்பட்டனர். 74 பேர் இதுவரை காணாமல் போயுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

போராட்டம் தொடர்பாக ஜனநாயக தேசிய லீக் கட்சியைச் சேர்ந்த 200- க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். 1990 இல் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்ற ஜனநாயக தேசிய லீக் கட்சித் தலைவர் ஆங் சான் சூ கியைப் பதவியேற்க விடாத இராணுவ அரசு, சூ கியை தொடர்ந்து 13 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வைத்துள்ளது. மியன்மாரில் 1962 முதல் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## திபேத் ஆன்மீகத் தலைவர் ஓய்வு பெறுவதற்குத் திட்டம்

தர்மசாலை,ஒக்.28

திபேத்திய மக்களின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா தாம் ஓய்வு பெறத்திட்டமிட்டுள்ளார் என அறிவித்துள்ளார். திபேத் தொடர்பாக, சீனாவுடன் மூன்றாவது சுற்றுப் பேச்சுகள் இடம்பெறவுள்ள ஒரு சமயத்தில் இவரது அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இது குறித்து தலாய்லாமா மேலும் குறிப்பிடுகையில்,''சீனாவுடன் ஓர் உடன்பாட்டை எட்ட நீண்டகாலமாக முயற்சித்து வருகின்றேன். எனினும் சீனத்தரப்பிலிருந்து இது வரை, சாதகமான பதிலெதுவும் கிட்டவில்லை'' எனக் கவலை தெரிவித்துள்ளார்.

''திபேத்திய மக்கள் அடிப்படை மனித உரிமைகளை இழந்து வருகிறார்கள். கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை கூடக் கிடையாது. இது வரை சீன அரசுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகள் பலனளிக்கவில்லை. இந்நிலையில் நிரந்தரமாக ஓய்வு பெறுவது குறித்து பரிசீலித்து வருகின்றேன்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


## சீட்டிழுப்பு முடிவுகள்

முளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு- 5011

2ம் பரிசு- 3201

3ம் பரிசு- 2505

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 01)3093 | 06)2160 |
| 02)1927 | 07)1988 |
| 03)2932 | 08)3156 |
| 04)2489 | 09)1562 |
| 05)2196 | 10)2121 |

மேற்படி பரிசுகளை பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் 25.11.2008இற்கு முன் முளாய் சிவாஸ் மில் (பிள்ளையார் கோயிலடி) தொடர்பு கொள்ளவும்.

முளாய் விக்ரோறி வி.க. (79515) செயலாளர்.


## நாடாளுமன்றில் தொல்லை கொடுக்கும் எலிகள்!

பாகிஸ்தானுக்கு தற்போது எலிகளால் புதிய பிரச்சினை எழுந்துள்ளது. வயல் வெளிகளில் அட்டகாசம் செய்வது போல பாகிஸ்தான் நாடாளுமன்றத்திலும் எலிகள் அட்டகாசம் புரிகின்றன. எலிகள் நாடாளுமன்ற வளாகத்திலுள்ள தொலைபேசி வயர்களை கடித்துத் துண்டித்துவிடுவதோடு, கணினிகளையும் பதம் பார்த்து விடுகின்றன.

அது மட்டுமல்லாமல், நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, உறுப்பினர்கள் மேசை மீது எலிகள் துள்ளிக் குதிக்கின்றன. இதனால் எம்.பிக்கள் அலறி ஓடும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து எலிகளைக் [illegible] நாடாளுமன்ற வளாகம் முழுவதும் எலிப்பொறிகள் வைக்கப்பட்டுள்ளன.


## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் இராசேந்திரம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராசேந்திரம் நேற்று (27.10.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் அன்னலச்சுமியின் அன்புக் கணவரும் இராசகுமார் (சுவிஸ்), சாந்தகுமார்(ஹொலண்ட்), ஜெயந்தினி (சுவிஸ்), சிவகுமார், யாழினி (ஆசிரியை, யாழ். ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் செல்வரஞ்சினி, ரஜிதா, சண்முகராசா, துஸ்யந்தினி, பாலேந்திர (கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நவக்கிரி.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# அத்தியாவசிய சேவைகள் கூட்டம் நாளையே

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்.செயலகத்தில் இன்று முற்பகல் 10மணிக்கு இடம்பெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும் என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(1-ரி)

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலைகள் கணிசமான அளவு குறைந்துள்ள நிலையில், இங்கு பெற்றோல் மற்றும் டீசல் போன்றவற்றின் விலைகளை வெறும் 25 ரூபாவால் குறைப்பதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று அவர் சொன்னார்.

யாரிடமும் கேட்காமல் நினைத்தபடி விலையை அதிகரிக்கும் அரசு, தனக்குச் சாதகமான முறையில் பிரசாரம் செய்வதற்காக வரவு - செலவுத் திட்டத்தைப் பயன்படுத்தி இந்த சொற்ப தொகை விலைக் குறைப்பை மேற்கொள்ளவுள்ளது என்றும் -

இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகளை ஏற்க முடியாது என்றும் - அவர் மேலும் கூறினார்.

(சி)

## ஈழத் தமிழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இன்னலுறும் தமிழர்களுக்கு உதவவேண்டியது பொதுவாக எல்லா இந்தியர்களினதும் குறிப்பாக இங்கு வாழும் தமிழ் மக்களினதும் கடமையாகும் என்றும் முதலமைச்சர் கருணாநிதி கூறினார்.

மிக விரைவில் ஒரு தொகுதி உணவு, உடை, மருந்துப் பொருள்களை தமிழ்நாடு அரசு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அனுப்பவிருக்கின்றது என்றும் முதலமைச்சர் மேலும் அறிவித்திருக்கிறார்.

தாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மத்திய அரசு 800 தொன் நிவாரணப் பொருள்களை உடனடியாக அனுப்ப முன்வந்தமைக்காகத் தமது நன்றியையும் முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(அ-1)

## வரவு - செலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்துள்ளது.

அரசால் அடுத்தவாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவு திட்டம் மூலம் இந்நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் எவையும் இற்றை வரை நிறைவேற்றப்படாத நிலையில் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை எப்படி நம்பமுடியும்?

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் நிச்சயம் பொய் வாக்குறுதிகள் தான் அடங்கியிருக்கும்.

ஆகவே, 2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாம் எதிர்த்தது போல் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தையும் நாம் எதிர்ப்போம் - என்று ஐ.தே. கட்சியினர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

(அ-சி)

# அரச, தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு கோரி ஐ.தே.க. இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஒக். 28

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகின்றது.

இன்று பிற்பகல் 4 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்தப்படும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட எம்.பியான ஜோஸப் மைக்கல் பெரேரா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவினம் அதிகரித்துச் செல்வதற்கு ஏற்ப தொழிலாளர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். வாழ்க்கைச் செலவின அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாமையால் அவர்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

வரவு - செலவுத்திட்டத்தில் எமது கோரிக்கை உள்ளடக்கப்படாவிட்டால் எமது போராட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் - என்றார்.

(சி)

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் ஊடுருவல் நடவடிக்கையை மேற்கொண்ட சிறப்பு அதிரடிப்படையினரை நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 12:50 மணியளவில் விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தினர். இதில் சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர் என்று விடுதலைப் புலிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். இது குறித்து படைத்தரப்பு தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

## சுவிஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்திற்கு ஆதரவைத் தெரிவித்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உறங்காது தொடர்ந்து கண் விழிக்கும் போராட்டத்தின் தொடக்க நாளில் பங்கேற்ற இளைஞர்களுக்கு 'எங்களையும் கொஞ்சம் பாருங்களேன்' எனும் ஒளிப்படநாடாவும் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் இன உணர்வாளர்களின் உரையும் காண்பிக்கப்பட்டன.

இளைஞர்களின் பெற்றோர்களினது உணர்வு மிக்க கருத்துக்களோடு கண் விழிப்புப் போராட்டம் நிறைவுபெற்றது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

இலங்கைப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து இந்தியாவின் தமிழ் நாட்டில் தோன்றிய அரசியல் போராட்டங்கள் காரணமாக இலங்கை - இந்திய உறவில் விரிசல் ஏற்பட்டுவிட்டதாகச் சிலர் சந்தேகித்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவிற்குமிடையில் புதுடில்லியில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது. அச்சந்திப்பின் பலாபலன்கள் பற்றி இருவரும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அந்தக் கூட்டறிக்கையின் ஊடாக இலங்கை - இந்திய உறவு தொடர்ந்தும் பலமாக உள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளிடையே விரிசலை ஏற்படுத்தி அரசியல் லாபம் பெற முயன்ற சிலர் இதன் மூலம் தோற்றுப் போய் விட்டனர்.

இந்தக் கூட்டறிக்கை மூலம் எமது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையைச் சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன என்பதும் நிரூபணமாகியுள்ளது - என்றார் அவர்.

(சி)

## வெள்ளவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர் என்றும் -

அவரிடம் பெறப்பட்ட தகவலின் படி வெள்ளவத்தைப் பகுதியில் அண்மையில் கிள்ளமோர்க்குண்டு ஒன்று மீட்கப்பட்டது என்றும் - பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

குறித்த நபருக்கு எவ்வாறு சயனைட் கிடைத்தது என்பது பற்றி இதுவரை தகவல் ஏதும் தெரியவரவில்லை என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கிளிநொச்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராகப் புதுடில்லிக்குச் சென்ற அவரின் சகோதரரும், அவரின் ஆலோசகரும், எம்.பியுமான பஸில் ராஜபக்ஷ, புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் நடத்திய பேச்சுகளை அடுத்து, செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிட்ட போதே, கிளிநொச்சி மீதான அரசுப் படைகளின் தாக்குதல் முயற்சி தீவிரமாகும் என்பதை அங்கு வைத்தே கோடி காட்டி விட்டார் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இலங்கை அரசு புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளின் போது மக்கள் பாதிக்கப்படுவதை இயன்றளவுக்குக் குறைப்பதில் தீவிர கவனம் செலுத்தும் என்றும் -

மக்கள் பாதிக்கப்படாத வகையில் யுத்தம் முன்னெடுக்கப்படும் என்றும் -

புதுடில்லியில் கருத்து வெளியிட்ட பஸில் ராஜபக்ஷ, கிளிநொச்சியில் இப்போது மக்கள் குடியிருக்கவேயில்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''கிளிநொச்சியில் பொதுமக்கள் எவருமில்லை. அவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள், ஆழமாக உள்ளே சென்று விட்டனர். எங்களது சூட்டு இலக்குகளிலிருந்து அவர்கள் தள்ளிப்போய்விட்டனர்.

''கிளிநொச்சி மருத்துவமனையைத் தவிர அங்கு வேறு அரச அலுவலகம் ஏதும் இயங்கவில்லை. மருத்துவமனை கூட அரசின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றது.

''கிளிநொச்சியிலிருந்து அனைத்து மக்களும் இடம்பெயர்ந்து விட்டனர். கிளிநொச்சியில் இனி யாரும் மிச்சமிருந்தால் அவர்கள் விடுதலைப் புலிகள்தாம்.'' - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அதாவது -

**படை நடவடிக்கையை தீவிரமாக்கும் உத்தி**

கிளிநொச்சி மீதான படை நடவடிக்கையில் இனி யாராவது கிளிநொச்சியில் பாதிக்கப்பட்டால் - காயமடைந்தால் அல்லது கொல்லப் பட்டால் - அவர்கள் நிச்சயமாக விடுதலைப் புலிகளே தவிர வேறு யாருமல்லர் என்பதை முற்கூட்டியே இந்தியாவில் வைத்தே தெரிவித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி.

இது, கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான அரசுப் படைகளின் நடவடிக்கையை இனித் தீவிரமாக்குவதற்கான முற்கூட்டிய சூழல் தயார்படுத்தல் நடவடிக்கை என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழர் தாயகத்தில் இலங்கை அரசுப் படைகளின் யுத்தம் தொடர்ந்தால் தாங்கள் தங்களது எம்.பி. பதவிகளை இராஜிநாமாச் செய்வார்கள் என்ற தமிழக எம்.பிக்களின் அச்சுறுத்தலை மத்திய அரசைக் கொண்டு வெற்றிகரமாக வாபஸ் பெறச் செய்ததன் பின்னணியில் -

இனி யுத்த நடவடிக்கைகளை முழு மூச்சாக - தீவிரமாக - எந்தவித வெளிநாட்டு அழுத்தமுமின்றி - தொடரக்கூடிய சூழல் ஏற்பட்டிருப்பதான திருப்தி அரசுத் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

## பேச்சு[illegible]லமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பியான கபீர் காசிம் இவ்விடயத்தை அங்கு எழுப்பினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் பஸில் ராஜபக்ஷவுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து இருதரப்பினராலும் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதிப் பேச்சுமூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு இணக்கம் தெரிவித்திருப்பதாக அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியாயின் தற்போது இலங்கையில் இடம்பெற்றுவரும் யுத்தத்திற்கு என்ன நடக்கப் போகிறது?

யுத்தத்தை நிறுத்திவிட்டு அரசு அமைதிப் பேச்சுக்குச் செல்லுமா அல்லது யுத்தத்தை நடத்திக்கொண்டே அமைதிப் பேச்சையும் நடத்த முயலுமா?

இது தொடர்பான அரசின் உண்மையான நிலைப்பாடு என்னவென்பதை அரசு இந்த நாட்டு மக்களுக்குக் கூறவேண்டும். - என்றார் அவர்.

(சி)

## சிவிலியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தபோதே பஸில் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் பருவமழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மருந்து மற்றும் உணவு வகைகளை வழங்க இந்தியா உறுதியளித்துள்ளது.

யுத்தப் பிரதேசங்களின் நிலையை ஐ.நா. நிறுவனங்கள் அங்கு விஜயம் செய்து மதிப்பீடு செய்யும்.

இலங்கையும் இந்தியாவும் உண்மையான நட்பு நாடுகள். - அவற்றின் மக்களும் கூட அப்படியே.

தான் இலங்கையின் உண்மையான நட்பு நாடு என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. எங்களின் (இலங்கையின்) பிரச்சினைகளை இந்தியா நன்கு உணர்ந்துள்ளது என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

யுத்தப் பூமியில் உள்ள மக்களைப் பாதுகாப்பதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் நாங்கள் செய்ய வேண்டும் என்பதையும் நாம் புரிந்து கொண்டுள்ளோம். இது குறித்து நாம் (இந்தியாவுடன்) கலந்துரையாடி வருகின்றோம். சிவிலியன் இழப்பை முற்றாக இல்லாமலாக்க அல்லது குறைக்க நாம் எத்தனிக்கிறோம்.

மக்களுக்கு சில கஷ்டங்கள் உள்ளன. நாம் அதனை ஏற்றுக்கொள்கிறோம். அந்தக் கஷ்டங்களைக் குறைக்க நாம் முயற்சிக்கிறோம்.

**2½லட்சம் மக்கள் இடம்பெயர்ந்ததாகக் கூறுவது தவறு**

அங்கு இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை இரண்டரை லட்சம் என்பது தவறு. அங்குள்ள மக்களின் மொத்த எண்ணிக்கையே இரண்டரை லட்சம்தான். முழு மக்களும் இடம்பெயர்ந்தவர்கள் என்று கூறுவது பிழையல்லவா?

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இன்னும் தங்கள் வீடுகளில்தான் தங்கியுள்ளனர். அவர்களிடம் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான சக்திதான் இல்லை.

ஆக, மன்னார், கிளிநொச்சி மாவட்ட மக்களே இடம்பெயர்ந்துள்ளனர்.

இப்போது மழை பெய்யத் தொடங்கி விட்டது. வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினை எங்களின் பொறுப்பு. இது குறித்து இந்தியாவுடன் நாம் கலந்துரையாடுகிறோம். அவர்களுக்கு உணவும் மருந்துப் பொருள்களும் வழங்க இந்தியா, முன்வந்துள்ளது.

பொருள்களின் விநியோகம் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவருடன் வாராந்தம் கலந்துரையாடுகிறோம். உரிய விநியோக வலையமைப்பை நாம் கொண்டுள்ளோம். எல்லா ஐ.நா. அமைப்புகளும் அந்தப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்யும். அவர்கள் எங்களுக்கு (உரிய)தகவல்களைத் திரட்டித் தருவார்கள்.

இலங்கை நிலைமை குறித்து புதுடில்லிக்கு சரியான - நல்ல - தகவல்கள் உள்ளன. இலங்கைப் பிரச்சினையை இந்தியா நன்கு புரிந்து கொண்டுள்ளது - என்று தெரிவித்திருக்கிறார்.

(சி)

# மரண அறிவித்தல்



## நாகமணி சீவரத்தினம்

இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகக்கொண்ட நாகமணி சீவரத்தினம் நேற்றுக் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால் சிவன்கோயிலடி
இணுவில் கிழக்கு.

90 /57, ரெலங்க பாற, வத்தளை.
தொ.பே:0773562746

தகவல்: மனைவி,பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.